ஸ்ரீ தேவீ கீதை

ஸ்ரீ புவநேஸ்வரீ பீடாதிபதி

கனம் ஓம் சாந்தி மௌனஸ்வாமிஜி அவர்கள்

அருளியது



ஸ்ரீ புவநேஸ்வரி பீடம் ஓம் சாந்தி ஆச்ரமம்

(அம்பாள் புரி) அம்பத்தூர் P. O. (சென்னை)

ஓம் தத்ஸத்

ஸ்ரீ தேவி கீதை

தபஸ் ஸித்திபெற்ற முனிவர்களும், ஸ்ரீ வித்யா உபாஸனையினுலே அவ்வப்பொழுது எழும் மோஹத்தை ஒழித்து, உலகில் சஞ்சரிக்கிருர்கள். இத்தேவி உபாஸனையைக் கொண்டே பெண்களால் வரும் மாயையை வென்று, பால்மணம் மாருத குழந்தையைப்போல ஸர்வசாதாரணமாக எல்லோரிடமும் பழகுவதற்குக் காரணம், எல்லாவற்றிற்கும் மேலான அழகுடைய ஸ்ரீ லலிதா பரமேச்சுவரியைத் தியானிப்பதுதான்.

அறிவைப் பெற்ற எந்த மனிதனும் இந்த ஸ்ரீ தேவி கீதையைப் படிக்கும்போது, அவனுள்ளம் ஒளிமயமாகி விசேஷ அறிவைப் பெறுகிறது.

இந்த ஸ்ரீ தேவி கீதையைப் படிப்பவனுக்கு எல்லாவித ஸித்தியும் உண்டாகி, இறுதியில் ஈச்வராநந்தமும் கிடைக்கிறது.

இதிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் தன்மயமானபடியால், தன்னைத்தானே உணர்ந்துகொள்ளும்படி தன் மனத்திலுள்ள துன்பவிசாரங்களை நீக்கி அன்புடையவனுக்கி, ஸ்ரீதேவியை உள்ளத்தில் கண்டு மகிழச்செய்யுமென்று உறுதியாக நம்புகின்றேன்.

தெய்வீகமான விஷயத்தை ரஹஸ்யமாகத் தம்முள்ளே உணர்த்தக் கூடிய அருள்வாக்கியத்தை கேட்டு அதன்படி நடத்த ஏதோ ஒரு சக்தி நம்முடனிருந்தும் விஷய வாசனை முதலிய எண்ணங்களைத் தள்ளி பரிசுத்த ஹ்ருதயமுடையவராகச் செய்து, அநுபூதி யென்னும் தேஜஸைக் காட்டிக் கொண்டு. நம்மை ரக்ஷிக்கும் பூர்விகமான சக்தியே ஸ்ரீ தேவி கீதை என்று பாராட்டுவோம்.

ஸ்ரீதேவியினுடைய பற்பல செயலைக் காணும்போது, அனுபவங்களே கீதையாக ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன.

ஸ்ரீதேவியினுடைய சக்தி, பற்பல இடங்களில் பல மாதிரியாக அடியார்களின் உள்ளத்தில் புகுந்து, பல அதிசயமான லீலைகளைப் புரிந்துவருகிறது.

மஹான்கள் அரும்பாடுபட்டு, தம்முடைய விஸ்தார ஹ்ருதயத்தில் தேவியைக் கண்டு கீதைபாடி எல்லாவித மூர்த்திகளுக்கும் மூலஸ்தானமாகிய ப்ரம்மத்தை உணர்ந்தார்கள். ஆனால், மனிதர்களே தம் இடைவிடா முயற்சியினால் மஹான்களாகின்றனர் என்பதை மறக்கக்கூடாது.

இந்த ஸ்ரீதேவீ கீதையை பாராயணம் செய்பவர்களுக்கும் மனனசித்தி உண்டாகி, உபாஸனையும் சித்திக்கிறது?

இந்த திவ்விய தேவீ கீதை புஸ்தகம் இருக்கும் இடத்திலே ஸ்ரீ மஹா லக்ஷ்மீ தாண்டவமாடுவாள். சித் கலா தேவீயாகிய ஆதிபராசக்தி யாவரையும் ரக்ஷிப்பாளாக!

ஓம் சாந்தி

ஸ்ரீ துர்கா தேவி

ஸ்ரீதுர்கா என்பது கன்னிப்பருவத்தைக் குறிப்பது. யௌவனமடைந்த ஒரு மனிதனுக்குத் தாய்தந்தையர் ஒரு கன்னியைத்தேடி மணம்செய்வித்து, ஸ்ரீ துர்கையை மறந்தவர்களாகி, குடும்பத்தைப் பெருக்குவதில்மட்டும் முயற்சி எடுத்துக்கொள்கின்றனர். நம்முடைய பூர்வீக லக்ஷ்யத்தை மறந்துவிடாமலிருக்க ஸ்ரீ துர்கா பரமேச்வரியைப் பூஜித்தறிந்து கன்னிப்பருவ நிலைமையின் நுட்பத்தையும் நம் பெரியோர்களிடத்திலுள்ள பக்தியையும் கொண்டு தெளிவு பெற்ற உள்ள முடையவரானபிறகு, க்ரஹஸ்தாசிரமத்தி லீடுபட்டால், ஒருகுறைவும் ஏற்படாமல் நம்மைக் காப்பாற்றிக்கொண்டவராவோம். இது சாதாரணமாக அனுஷ்டிக்கக்கூடியதுதான். ஆனால், தாயார் தகப்பனாருடைய செய்கையைப் பொறுத்து, குழந்தைகளிடமும் காணப்படுவது சகஜம். குழந்தைகளை நல்வழியில் திருப்பவும் அறிவை வளரச்செய்யவும் குடும்பஸ்தர்களிடம்தான் சாவி இருக்கிறது.

இன்னொரு விதம்; அதாவது, ப்ரம்மசர்யத்திலிருந்தே இந்தக் கன்னிப்பருவத்தில் மோஹம் கொள்ளாமல் "ஸ்ரீ துர்கா பரமேச்வரியின் அம்சங்கள்" என்று பயந்தவனாக வணக்கத்துடன் போற்றிவருவானாகில், தன் மனித லக்ஷ்யத்தை நழுவ விடவே மாட்டான்.

கன்னிகைக்குக் காமத்தில் இச்சை ஏற்படாது. யௌவனமடைந்தவனே கன்னிகையைக் கண்டு மோஹமடைகிறான். அவனுடைய மோஹமே அவனிடம் ஆயுதங்களாகத் திரும்பிவிடுகிறது. அவன் பற்பல துன்பங்களுக்கு ஆளாகின்றான். அதற்குக் காரணம் கன்னிகைக்கு அவனிடம் ப்ரேமையில்லாமையே என்று சொல்லலாம். ஸ்ரீ துர்காதேவி பல ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறாள். அவை ஒருவனைக் கெடுப்பதற்கல்ல. கன்னியைக் கண்டு மோஹமடைந்த துன்பங்களை அனுபவித்தவனானாலும், எதேச்சையாகத் தன்னிடம் வந்து வந்தனம் புரிவானா

கில் அவனை ரக்ஷிக்கவே ஸ்ரீ துர்காதேவி ஆயுதம் தாங்கியிருக்கிறாள் என்பதை நாம் அறியவேண்டும். பெண்களைக் கண்டு மோகிக்கும்போது, தேவி ஆயுதம் தாங்கிக் காட்சியளிக்கிறாள். பெண்களைத் தேவிமார்கள் என்று தம் யோக வலிமையால் உணர்ந்த மஹான்களுக்குத் தாயாகக் காட்சியளிக்கிறாள்.

உதாரணமாக: ஒரு கிராமத்தில் உத்தம தம்பதிகள் இருவர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு உத்தம புத்திரன் இருந்தான். பூணூல் போடப்பட்ட அப்புத்திரன் அதிகாலையி லெழுந்து ஸ்நானம்செய்து ஸந்தியாவந்தனம் முதலியவற்றைச் செய்து, அருகிலுள்ள ஸ்ரீ துர்கா பரமேச்வரீ க்ஷேத்திரத்திற்குச் சென்று வந்தன வழிபாடுகள் செய்து வருவது வழக்கம். தாய்தந்தையாரோ மகனுக்குத் தக்க யுவதியை மணம்செய்து வைக்க ஏற்பாடு செய்தனர். புத்திரனுக்கோ உறுதியான எண்ணம் இல்லை. அதனால் அவன் மனக்குழப்ப மடைந்தான்; நல்ல யுவதிகளைக் காணும்போதும் காணாதிருக்கும்போதும் பல யோசனைக்கு உள்ளானான்.

ஆனால், அவன் ஸ்ரீதுர்கா பரமேச்வரி கோவிலுக்குப் போய்வருவதை நிறுத்தவில்லை. மனம் குழப்பமடைவதற்கு முன் இருந்த சிரத்தையும் பக்தியும் குறைந்தாலும், "ஓ துர்கா பரமேச்வரீ; எது நன்மையோ அதைச்செய்! என்னைக் காப்பாற்று. என்னைக் காப்பது உன் கடமை" என்று தினம் ஒரு முறை ஸ்ரீ துர்கா தேவியிடம் முறையிடுவது வழக்கம்.

இவ்வாறு சில நாள் கழியவே, ஒருநாள் இரவில் அவன் திண்ணையில் படுத்துறங்கும்பொழுது தன்னை யாரோ தட்டி எழுப்புவதுபோல் இருந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்தான்.

அப்பொழுது, கலீர் கலீர் என்னும் பாதச் சிலம்பின் ஒலி ஸ்ரீ துர்கா பரமேச்வரியின் கோவிலிலிருந்து, தன் வீட்டுவாசலில் வருவதுபோலத் தோன்றிற்று. அவன்

மனதில் திடங்கொண்டு, ஸ்ரீ துர்கா தேவியைத் துதித்துக் கொண்டே இருந்தான்.

ஸ்ரீ துர்கா பரமேச்வரி க்ஷேத்திர மடைந்து, உருகிய மனமுடையவனுகி நின்று, "துர்காதேவி, கார்த்தியாயனி, தாயே, ரக்ஷி! ரக்ஷி! உன்னுடைய அம்சமாகிய பெண்களிடம் என் மனத்தைச் செலுத்த அருள் புரியவேண்டும்! துன்பங்களுக்குக் காரணம் பலப்பல ஆகும் என்பதை உம்முடைய பாதச் சிலம்பின் சப்தத்தாலே நான் தெரிந்து கொண்டேன்! இனி நான் மோசம்போகமாட்டேன் என்று நான் ஜம்பம் அடித்துக் கொண்டாலும், தங்கள் பிரஸாதத்தினுலேதான் ஸ்திரீ மயக்கமான கட்டுக்களைத் தாங்கள் அவிழ்த்துவிடவேண்டும்" என்று வேண்டி, தேவியின் பாதகமலங்களில் விழ்ந்து கண்ணீரும் கம்பலையுமாகத் துதி செய்துவந்தான்.

இப்படிச் சில நாட்கள் கழியவே, புத்திரனுக்கு மணம் செய்துவைக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த தாய் தந்தையர் காலமாயினர். புத்திரன் அவர்களுக்கு வேண்டிய கர்மாதிகளைச் செய்துமுடித்தான். நாம் எதில் வெறுப்படைந்து, "இது நமக்குத் தகுந்ததன்று! இன்னெருவஸ்து, இதற்கும் மேலுள்ள பேரானந்தம், நம்முள்ளே இருக்கிறது. அதை அறியவேண்டும்'! என்றுள்ள திட நிச்சயம் கொண்ட புத்திரனுக்குப் பந்தம் எப்படி வரும்? வெறுப்படைந்தது தானுகத் தன்னை விட்டு விலகு மல்லவா? உள்ளன்போடு நாம் எவ்விதம் பூஜிக்கிருேமோ, அவ்விதமே அதன் பயனை அடைந்தே தீரவேண்டும்.

இக்காரணத்தைக் கொண்டே நம் பெரியோர்கள் வித்தைகளைக் கற்பிக்கின்றனர். மந்திரங்களை ஜபிப்பது பஜனைகளைச்செய்வது முதலிய நாம் நடந்துகொள்ள வேண்டிய நியமங்களை உபதேசிப்பதும் செய்துகாட்டுவதுமான ஸத்காரியங்களைக் கொண்டு மனவுறுதியினுலே ஆனந்தமடைந்து, ஸரஸ்வதியின்மூலம் ஸாம்ராஜ்யலக்ஷ்மியைப் பெறவேண்டுமென்பதே பெரியோர்களின் நோக்கம்.

உதாரணமாக, ஒரு கிராமத்தில் தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு உத்தம மகன் உண்டு. "நாம் பேசும் உண்மையே தெய்வம்!" என்றுள்ள நிச்சயத்தைக் கொண்டு உண்மையாக இருந்து, "ஸரஸ்வதி தானகவே பிரகாசிக்க வேண்டும்" என்றுள்ள உபதேசத்தைக் கேட்டவனாக இருந்து, அதன்படியே "பேசுவது ஸத்யமாக இருப்பதுதான் ஸரஸ்வதி" என்று உள்ளத்திலே நினைத்தவனாக எந்த விஷயத்தின்பொருட்டும் பொய் பேசாமலிருந்து வந்தான்.

அவன் யௌவன மடைந்தபடியினாலே, தக்க யுவதி ஒருத்தி அவனிடம் தானாக வந்து வணக்கத்துடன் பேசலானாள்: 'ஸ்வாமி, நீங்கள் கலயாணம் செய்துகொள்ளவில்லையாமே! வாஸ்தவமா?' என்றாள். இவ் வசனத்தைக் கேட்டதும் அவன் உடனே "ஆம், தாயே, நான் உண்மையை நினைத்துக்கொண்டு எந்த விஷயத்தின்பொருட்டும் பொய் பேசாமலிருக்கப்போகிறேன். என் உள்ளத்திலிருப்பதை நீ எப்படிக் கண்டுகொண்டாய்?" என்றான்.

இதைக் கேட்டதும் வெட்கத்துடன் நின்றவளாய், "ஸ்வாமீ, நான் உம் உள்ளத்திலிருப்பதைக் கண்டு சொல்லவில்லை. என்னுடைய வாழ்க்கைக்கு நீங்கள் தலைவராக இருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு கேட்டேன்" என்றாள்.

"அப்படியா மோஹிக்கிறாய்! எனக்கு உன்னிடம் மோஹம் ஏற்படவில்லையே! உன்னைப் பார்க்கும்போது; ஸரஸ்வதிதேவியே நேரில் வந்து நிற்பதுபோலல்லவா நான் பார்க்கிறேன். என்னிடமுள்ள மோஹத்தை விட்டுவிடு; வேறு யாராகிலும் உன்னை வாழ்க்கைத் துணைவியாக கொள்ளட்டும். என் பார்வைக்கு ஸரஸ்வதியாக நீ காட்சியளிக்கும்போது உன்னை நமஸ்கரித்து அருளைப் பெற வேண்டியவனாயிருக்கிறேன்" என்றான். உடனே அவள் அவனை விட்டு நீங்கிச் சென்றாள்.

பின்பு அவனே, "நம் வாக்கைச் சில நாளைக்கு ஸத்ய மாகக் காப்பாற்றுவதற்குள், ஸரஸ்வதிதேவி ஒரு பெண் ணுருவம் கொண்டு வந்து தரிசனம் அளித்தாள். இன்னும் சில நாள் இப்படியே ஸத்யமாக இருந்தால், நமக்கு இதற்கும் மேலான பேராநந்தம் கிடைக்கும்!'' என்று எண்ணியவ ளுகத் தன்னை அடக்கி ஸரஸ்வதிதேவியைப் புகழ்ந்தான்.

ஆத்ம வித்யாஸ்வரூபிணியாக விளங்குபவள் ஸரஸ்வதீ தேவி! ஆத்மவித்யை கற்றுக்கொண்ட சப்தமாகிய வேதங் களை உச்சரித்து. ஸரஸ்வதிதேவியை - நம்முள்ளத்தில் (ஸ்வர்க்கத்திற்கும் பூமிக்கும் பறக்கும்படியான வெண்மை நிறமுடைய அன்னபக்ஷிமேல்) அமர்ந்த ஸரஸ்வதி தேவியை—உணர்ந்து உபாஸிக்க வேண்டும்.

வித்தையினால் ஏற்பட்ட அஹம்பாவமானது ஸ்வர்க்க போகத்திற்கும் பூமியில் தன்னைவிடப் பெரியவன் கிடை யாது என்ற புகழுக்கும் வித்தையைப் பங்கிட்டுக்கொடுக்கா மல், பரிசுத்த ஹ்ருதயத்தில் வெண்மையாகிய விஸ்தார ஜோதியில் ஸரஸ்வதிதேவி விளங்குவதை அறிந்து உபாஸித்து, தானும் ஸரஸ்வதியாகக் சோபிக்கவேண்டும். ஸத்யாத்மாக்களுக்குக் குருவாயிருந்து உணர்த்தக் கூடிய ஸரஸ்வதிதேவியைக்கண்டு ஆனந்தித்தவனுடைய உள்ளம் வேதமாதாவாகிய உதயமண்டலத்தைக்காணும்.

வேதங்களைப் படித்த அண்ணனே குடும்பப்பற்று தலைக்கொண்டு வேதங்களுடைய உட்பொருளை ஓதாமலே தன் முயற்சியினாலே உள்ளத்தில் நுழைந்து வேதங்களின் முடிவாகிய ஸ்ரீ ஸாவித்ரி தேவியைக் கண்டு மகிழ்ந்தான்.

இப்படி சிலநாள் கழிந்ததும் அகங்காரம் அடைந்த அண்ணன் தம்பியை அழைத்து, வேத விஷயமாகச் சில கேள்விகளைக் கேட்டான். அதற்குத் தம்பியும் வேத விரோதமில்லாமல் விடையளித்தான். "வேதமே படிக்காத தம்பி நான் கேட்கும் கேள்விகளுக்கு எப்படி விடையளிக் கின்றான்!" என்று வியந்த அண்ணன் "தம்பி, நீ வேதங்

களை ஓதாதவனுயிற்றே! எவ்வாறு ஓதியவனைப்போலப் பதில் கூறினுய்?'' என்று கேட்டான்.

"அண்ணு! ஏகாந்தமாக உட்கார்ந்து கொண்டு மனத்தினுள் சப்தத்தை நிறுத்திப் பார்த்தபோது ஸ்வரூபம் தென்பட்டதிலிருந்து, பற்பல சுருதிகள் கிளம்பின! அந்த ஒலியைக் கேட்டு ஆனந்த மடைந்துகொண்டே, நீ கேட்ட கேள்விகளுக்குப் பதில் தானுக வந்ததை உன்னிடம் சொன்னேன்!'' என்ருன் தம்பி.

அதைக் கேட்டதும் அண்ணன் பிரமித்து நின்று, "இவன் வேதங்களின் முடிவையே கண்டான்போலும்!'' என்று தம்பியின் ஆசீர்வாதத்தைப் பெற அவன் காலில் விழ்ந்தான். தம்பி அண்ணுவை எவ்வளவோ தடுத்தும் கேட்காமல், தம்பியினுடைய ஹ்ருதயத்திலுள்ள அருள் வடிவத்திற்குத் திரும்பத் திரும்ப வணங்கியதும், தம்பியும் "என்னுள்ளே புகுந்துள்ள திவ்யசக்தி ஸாவித்ரியை உன்டைய நமஸ்காரங்கள் அடையட்டும்!'' என்று சாந்தியுடன் உரைத்து, ஸாவித்ரிதேவியினுடைய பிரபாவத்தைப் புகழ்ந்தான்.

இதனுல் வேதங்களைப் படித்த பண்டிதனைவிட வேத முடிவைக் கண்டவன் பெரியவன் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

வேதமாதாவாகிய ஸாவித்ரியிதேவின் அருளைப் பெற்றவனுடைய உள்ளத்திலிருந்து கிளம்பும் பற்பல அநுபவ மொழிகள் மஹா ஞானிகளின் செவிக்கு உணவாகும்.

'ஸவர்க்கத்திலோ அந்தரிக்ஷத்திலோ ஸ்ரீஸாவித்ரியைத் காணமுயாது; பூலோகத்தில் மஹான்களுடைய ஹ்ருதயத்தில்தான் காணக்கூடும்!' என்று எண்ணிய ஸ்ரீ நாரத முனிவர், பூமியில் ஒவ்வொரு மஹானின் உள்ளத்திலும் புகுந்து, ஸ்ரீஸாவித்ரி தேவியைத் துதித்து வந்தனம் கூறிக் கொண்டே போனுர். ஒருவன் ஸ்ரீஸாவித்ரி தேவியை உள்ளத்தில் பூஜிக்கும் வேளையாயிருந்தது. அப்பொழுது

அவன் ஏதோ விஞ்ஞானம் கேட்டதும், அப்படியே ஸாவித்ரி தேவியின் பாதகமலங்களைப் பிடித்துக்கொண்டு தன் சிரஸை அத் திருவடிகளில் சேர்த்து வணங்கினான். ஸங்கீதவிஞ்ஞானம் கேட்டுக்கொண்டே இருக்க, "யாரோ நம் உள்ளத்தில் ரஹஸ்யமாய் புகுந்து வருகிறார் போலும்! பார்ப்போம்" என்று எண்ணியவனாக இருந்தான்.

ஸ்ரீ நாரதமுனிவரும் அடுத்துவந்து ஸ்ரீ ஸாவித்திரியைத் துதித்தபடி. "பக்தர், உன்னுள்ளத்தில் ரஹஸ்யமாய்ப் புகுந்து நீ பூஜித்துவரும் ஸ்ரீ ஸாவித்ரியை வந்தனம் செய்ய வந்தேன். என்னைத் தேவரிஷி யென்பார்கள்! நான் இப் படியே ஒவ்வொரு பக்தனுடைய உள்ளத்திலும் புகுந்து தேவிக்குப் பிரியமான ஸங்கீதத்தைப் பாடி அப் பக்தர் களுடைய உள்ளத்தையும் பரவசப்படுத்துவேன். ஸ்வர்க் கத்திலோ ஸித்தர்கள் ஸஞ்சரிக்கும் அந்தரிக்ஷத்திலோ நான் அதிகமாய்த் தங்குவதில்லை. அவைகளைவிடப் பூமி யின்கண் வந்து உன்னைப் போலுள்ள உத்தம பக்தர்களு டைய உள்ளத்திலேதான் ஸ்ரீஸாவித்திரி தேவியைப் புகழ்ந்துகொண்டு சிறிதுநேரம் தங்குவேன்" என்றார்.

இதைக் கேட்டதும் வேதமாதாவாகிய ஸ்ரீஸாவித்திரி தேவி, "மஹரிஷே! பக்தர்களிடம் பிரேமைகொண்டுவந்து பக்தனுக்கு மேலான சக்தி ஒன்று இருக்கிறது என்று மீண் டும் மீண்டும் அறிவுறுத்திக்கொண்டே இருக்கிற உம் முடைய கருணையை என்னவென்று சொல்வேன்!" என் றாள். "உன் கிருபையினாலேயே இப்படிச்செய்ய எனக்குத் தோன்றின்று! ஸ்ரீ மாதா நமஸ்காரம்," என்று வணங்கிப் பலதுதிகளைப் பாடினார்; அருளைப் பெற்ற ஸ்ரீ நாரதமுனி வர் பின்னர் அந்தர்த்தானமானார்.

சிறிது நேரம் ஆனந்தமடைந்த பக்தன் "நம்முள் ளேயே எல்லாவித சுகங்களும் இருக்கின்றன" என்று எண்ணியவனாக ஸாவித்ரி தேவியைத் துதித்துப் பாடி னான். இதனால் ஸாவித்ரி தேவியினுடைய அம்சம் மஹான்களுடைய உள்ளத்தில் ஒளி வீசிக்கொண்டிருப்

பதை தேவர்களும் அத்தேவியைத் தரிசனம் செய்ய ஆவலுடன் இருப்பார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தசரத புத்திரராகிய இராமருக்கு முதன் முதல்ஸாவித்ரி தேவியினுடைய திவ்ய தேஜஸைக் காட்டினுர் விஸ்வாமித்திர மகரிஷி அதன்பிறகுதான் அவர் ஆத்மாவில்ஆனந்தமென்னும் ஸீதாதேவியை மணந்துகொள்ள, கார்முகத்தை ஒடிக்கச் சக்தி உண்டாயிற்று. தேவியின் அம்சமாகிய ஸீதாதேவி, "இராமனேயே மணந்துகொள்ளவேண்டும்! என்று ப்ரதிஜ்ஞை செய்ததினுலே மறைவாயிருந்த மஹா சக்தி தோன்றி உதவி புரிந்தது!" என்று இராமப்பிரபுவே சொல்லியிருக்கிருர்.

துர்கா,தேவி லக்ஷ்மி, ஸரஸ்வதிதேவி, ஸாவித்ரிதேவி இந்த நான்கு சக்தியும் தானெரு சக்தியும் கூடிப் பிரகாசிக்கும் காயத்ரீதேவி, பஞ்சமுகத்திலே பக்தர்களுக்குத் தரிசனம் அளித்து, நித்யபதவியைக் கொடுக்கிருள்.

காயத்ரீ தேவி

எல்லாவித தேவைகளுக்கும் மேலான தேவதை ஒன்று உண்டு என்று சொல்கிறேமே அது காயத்ரி தேவியே.

திவ்ய தேஜஸை உள்ளே நினைத்துக்கொண்டு இந்த மஹாகாயத்ரி ஜபம் செய்துவரும் மனிதன் மஹானுகிருன்.

யுகம் என்று எப்போது ஆரம்பித்ததோ அப்போதே மஹா காயத்ரி ஜெபம் உண்டாகி, தந்தை மகனுக்கு உபதேசிப்பது என்றுள்ள கொள்கையை அனுசரித்து, தலைமுறை தலைமுறையாக இன்றும் உபதேசித்துக்கொண்டே இருப்பதை நாம் பார்த்துவருகிறோமல்லவா? அதன்படியே ஜபித்து வரவும் வேண்டியது அவசியம். ஒரு தினம் ஸஹஸ்ராவர்த்தி இந்தத் திவ்ய மஹா காயத்ரீஜபம் செய்வதால், ஒருமண்டலத்திற்குள் நிச்சயம் அத்யாத்ம தர்சனத்தைப் பெறலாம்.

யஜ்ஞோபவீததாரணமுடைய எவராயினும் சரி அவருக்கு காயத்ரீஜபம் முதலிய அனுஷ்டானங்களைச் செய்ய அருகதை உண்டு. ஆனுல், குரு பக்தியில் ஈடுபட்டுக் குரு உபதேசிப்பதை ஜெபிப்பதாலேயே மிகுந்த நன்மை அடைகிருர்கள்.

காயத்திரீ ஜபம் செய்வதாலே உள்ளம் ஆனந்தமடைகிறதும் அதனுல் தியான சுகத்தை அனுபவிப்பதுமான மனோராஜ்யத்தில் சிந்தனைக்கே நேரமில்லாதபோது, வெளிவிஷயங்களில் சிந்தனையைச் செலுத்தாதவனுக இருந்து ப்ரம்மானந்தம் அடைந்ததும் வெளியும் உள்ளும் ஒரே தன்மையை அடைவிக்கிறது மஹாகாயத்ரி ஜபம்.

வித்யா உபாஸனையை உபதேசம் பெற்றுக்கொண்டு, 'நான் வித்யா உபாஸகன்' என்றுமட்டும் சொல்லிக்கொண்டு காயத்ரி மஹாஜபத்தை அவஸர அவஸரமாகச் சிறிதும் சரியாக ஜெபிக்காமலிருந்து, ஒருமுகப் படுத்தாமல் குழப்பமடைந்திருப்பதை நேரில் பார்க்கலாம். கட்ட

டத்திற்கு அஸ்திவாரம் முக்கியமல்லவா? முதலில் நம் பெரியோர்களிட மிருந்து உபதேசம்பெற்ற மஹாகாயத்ரியை ஜெபித்து மனதை ஒருமுகப்படுத்திக்கொண்டால், எவ்வித உபாஸனைகளைச் செய்தாலும் சீக்கிரம் ஸித்தி பெறலாம். இந்த மஹா காயத்ரி ஜபத்தினாலேயே எல்லாவித மந்திரங்களுடைய ஸ்வரூபத்தையும் காணலாம்.

மஹாகாயத்ரி ஜபத்தினாலே பல ஸித்திகள் உண்டாகும். காயத்ரி ஜபத்திற்கு இவ்வளவா சக்தி என்பதை அறிந்துகொண்டு இன்னும் அதிகமாக மனத்தை ஊன்றி காயத்ரி ஜபம் செய்துவரவேண்டும். இந்தப்படி ஜபிக்க ஜபிக்க மேலும் மேலும் பற்பல அனுபவங்களைக் காட்டித் திவ்ய தேஜஸிலே சேரவேண்டிய ஐக்கிய பாவத்தையும் உணர்ந்து முகவொளியுடன் இருப்பாய்.

இதைப்போல நடந்த உதாரணம் ஒன்று உண்டு. ஒரு கிராமத்தில் ஒரு பிரம்மசாரி தினமும் காலையில் ஸ்நானம் செய்து ஸஹஸ்ராவர்த்தி காயத்ரி ஜபித்த பிறகுதான் தன்னுடைய அனுஷ்டானங்களைச் செய்துவருவான். "ஸந்தியா வந்தனம் மூன்று காலங்களிலும் செய்வது அன்றுடம் செய்கிற பாபங்களைத் தீர்க்கும். இது தவிர காயத்ரிஜபம் ஸஹஸ்ராவர்த்தி செய்வதானது உள்ளத்தைக் காட்டும்" என்று எண்ணியவனாக, மூன்றுகாலங்களிலும் ஸந்தியா வந்தனமும், காயத்ரி மஹாஜபம் ஸஹஸ்ராவர்த்தியும் செய்துவந்தான். இப்படிச் சில நாள் கழிந்ததும், அந்தப் பிரம்மசாரி பக்கத்து ஊருக்குப் போக நேரிட்டது. ஸாயங்காலமான படியால், அன்றைய தினம் அவ்வூரிலே, ஒரு விட்டுத் திண்ணையில் போய்ப் படுத்துக்கொண்டான்.

அந்த வீட்டிலோ ஓர் பெண்ணைப் பேய் பிடித்திருந்தது. அது இரவெல்லாம் சத்தமிடும். இருந்தாற்போலிருந்து புடவைகளோ வேஷ்டிகளோ நெருப்புப் பற்றி எரியும். இந்த ஸமாசாரம் பிரமசாரிக்குத் தெரியாது. பேய்பிடித்த பெண்ணோ, 'உடம்பெல்லாம் எரிகிறதே' என்று சொல்லிக் கொண்டு வெளி வந்து வாயிற் கதவைத்திறந்து. "ஸ்வாமி,

நான் போகிறேன். என்னை எரிக்காதே!'' என்று சொல்லிக்கொண்டே கீழே விழுந்தது. அவளைப் பிடித்திருந்தப் பேய் நீங்கி போயிற்று! வீடு பேயின் தொந்தரவுமில்லாது பரிசுத்தமாயிற்று.

இதை முற்றிலும் கவனித்திருந்த பிரம்மசாரி, ''நாம் சில நாளைக்கு இந்த மஹாகாயத்ரி ஜபம் செய்த சக்தியைக் கண்டு பேயே பயந்தோடிற்று. இன்னும் அதிகமாக ஜபித்து இதற்கும் மேலுள்ள தேஜஸை அறியவேண்டும்;'' என்று எண்ணியவனாகி, ஊருக்கு வந்து, மஹாகாயத்ரி மந்திரத்திற்குமேல் வேறொன்றும் கிடையாது என்று திட நிச்சயங்கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி, தன்னுள்ளே திவ்ய தேஜஸைப் பார்த்துக்கொண்டு மனோஜபமாக ஜபித்துத் தியானநிஷ்டை கூடி ஆனந்தமடைந்தான்.

மஹாகாயத்ரி ஜபமானது, நம்மை அறியாமல் ஏதோ ஒரு தேஜஸுடனிருந்து நன்மை அளித்துக்கொண்டு வழிகாட்டி நடக்கும்.

ஆதிசங்கர பகவத்பாதர் மஹாகாயத்ரி ஜபத்தினாலேயே ஸித்தியடைந்து எவ்வளவோ லீலைகள் செய்ததை நாம் கேட்டிருக்கிறோமல்லவா ?

துரிதவர்க்கங்களையெல்லாம் தீர்த்து ரக்ஷிக்கக் கூடியவள் துர்காதேவி! ஸத்கர்மங்களைச் செய்து பயனை விரும்புவதான பிச்சையை வாங்காமல். ''அதன் பயன் உனக்கே, எனக்கு வேண்டா'' என்ற பாவனையில் இருந்தவனுக்கு, எந்தப் பாக்கியம் தன்னை ரக்ஷிக்குமோ அந்த ஸௌபாக்கியத்தை அளிப்பவள் ஸ்ரீதேவியாகும். எந்த வித்தையினால் வேதங்களின் ஸ்வரூபத்தைக் கண்டு பிராணனைப் பரமாத்மாவிற்கு ஆதாரமாக இருப்பதைத் தெரிந்து கொள்ளலாமோ அதை உணர்த்துகிறவள் ஸரஸ்வதிதேவி! 'இதனால் வேதங்கள் உண்டாயின. வேதசப்தம் அடங்குவதான இடத்தில் திரும்பி உள்ளத்தில் அனுபவங்களை உணர்ந்து, பேரின்பம் அடையுங்கள்' என்று தெரியப்

படுத்துகிறவள், அருணஞெளிக்கு ஸமானமாகிய திவ்ய தேஜோமய ஸ்வரூபிணியாக விளங்குபவள், ஸாவித்ரி தேவியாகும். இந்த மூர்த்திகளையும் தானுக அறிந்து தானொரு முகமும் கூடியதாகத் தன்னுள்ளே காத்ரிதேவி பஞ்சமுகமாகக் காட்சியளித்துப் பக்தனை இரக்ஷிக்கிருள்.

ஞானவிஸிஷ்டர் ஒருமுறை காயத்ரிஜபம் செய்து யோக தண்டத்தை வைத்ததும், விச்வாமித்ரருடைய பாணங் களெல்லாவற்றையும் அந்த யோகதண்டம் தடுக்கவில் லையா? மஹாகாயத்ரிஜபம் ஸித்தியானுல், ஒரு காயத்ரி மனதால் ஜெபிப்பதற்குள் ஞானவடிவமாகிய மனது ப்ரம் மத்தினிடம் சேர்ந்து யோகத்தில் அமர்ந்துவிடும்! இவ் விதம் ஸித்தியடைந்த ஞானிக்குச் சத்துருக்கள் செய்யும் துன்பமும் அருகில் வரும்போது நன்மையாக மாறும். இவன் சத்ரு, இவன் நல்லவன், என்ற வேற்றுமையே அவருக்குத் தோன்ருது. இந்த ஸமத்வமே சாந்தி அளிக் கிறது.

தன் வீட்டு அறைக்குள் தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்த பிரம்மசாரி மஹா காயத்ரீ ஜெபம் செய்து கொண்டிருந்தான். அந்த ஸமயம் ஒரு பெரிய கருநாகம் வந்தது. அந்தப் பிரம்மசாரி மஹா காயத்ரிஜபம் செய்வதி ஞல் உள்ளத்தில் திவ்ய தேஜஸைக் கண்டு மனத்தை முக் காற்பங்கு உள்முகம் திருப்பியவனுக இருந்து கண்களை மூடியும் மூடாதவனுமாக இருந்ததனுல், கீழே பார்த்தான். முதலில் ஏதோ கயிருகத் தோன்றியது. தலையைக் குனிந்து உற்றுப்பார்க்கையில் ஊர்ந்து செல்லுவதைக் கண்டான். உடனே ஒரு முறை காயத்ரி ஜபித்து, "இதுவும் உன்னு டைய அம்சம்தானே, இதைக் காணும்போது மனிதர்கள் ஏன் பயப்படுகிருர்கள்? கருநாகமே, நீ வெளியே போய் விடு" என்ருன். அதைக் கேட்டதும் அந்தக் கருநாகம் துள்ளிக் குதித்துக்கொண்டு ஸந்தோஷமாக ஓடிவிட்டது. பிரம்மசாரியும் மஹாகாயத்ரி ஜபத்தினுடைய பெருமை யைக் கண்டு மகிழ்ந்தான்.

நாம் எந்த விஷயத்தின் பொருட்டும் மனத்தால் ஒன்றைக் கண்டு பேசுவோமானால், எல்லா ஆத்மாக்களுக்கும் விளங்கும். ஆனால் நியதியாக மஹாகாயத்ரி ஜபிக்க வேண்டும் என்பதை மறக்காதே! மஹாகாயத்ரி ஜபத்தால், பிதிர்க்களும்கூட, "இப்படி ஒரு மஹான் நம் குடும்பத்தில் பிறந்து நம்மைக் கடைத்தேறச் செய்கிறான்" என்று ஆசிகூறுகிறார்கள்.

காயத்ரீஜபம் செய்துகொண்டு ஏகாக்ர சித்தத்தை அடைந்தோமானால், அது சரீரத்தைக் கருடபக்ஷியாகக் காட்டி, அதன்மேல் அந்தர்முக சிதாகாயத்தில் பறந்து செல்லும்படியான சக்தி வந்து விஸ்தாரமாகக்காட்டி, அமிருதத்தைக் கொண்டுவரச் செய்யும் சக்தியைத் தரக்கூடியது. முக்குண வாஸனையை அறிந்து, குணங்கள் பிறக்குமிடமான மூலப்ரக்ருதியைக் கடந்து, ப்ரம்மத்தினிடம் சேர்ப்பிக்கும் மந்திரம் மஹாகாயத்ரீஜபமே!

சில மஹான்கள் இந்த மஹாகாயத்ரீ மந்திரத்தைக் கொண்டு பிராணுபானங்களும் செய்து சித்தசுத்தி அடைகிறார்கள். ஒரு நாளும் பிறக்காத வஸ்து, பற்பல இடங்களில் பல அடியார்களுடைய உள்ளத்தில் புகுந்து காரியங்களை நடத்தும் மஹாசக்தி காயத்ரீ தேவியின் அம்சமே.

காமாக்ஷிதேவியை உள்ளத்தில் கண்டு பூரிப்பதுபோல, வெளியில் காணும் பெண்மணிகளை காமாக்ஷிதேவியின் அம்சமெனக்கருதி, மனத்தைப் பதறவிடாமல் தம்முள்ளத்திலேயே தேவியின் பாதகமலத்தண்டை இருக்கப் பழகு!

பூமிக்கு நடுப்பாகம் காஞ்சி நகரம். அந்த இடத்தில் காமாக்ஷிதேவி விளங்குகிறாள். மனிதர்களும் அந் நடுப்பாகத்தை இரமிக்கவே பல தொழில்கள் புரிகிறார்கள். உண்மையைக் கண்ட மனிதன் குருவின் உபதேசப்படி அந்த நடுப்பாகத்தை (நம்முடம்பிலுள்ள யோனி ஸ்தானத்தை) தியான பூர்வமாக அடைந்து காமத்திற்கு இருப்பிடமான மூலாதார தொழில் காமாக்ஷிதேவியை உபாஸித்து, தன்னை ஜயித்துவிடுகிறான். இந்தப்படியுள்ள வித்தியா உபா

ஸகனுடைய ஈச்வராம்சம் பொருந்திய ஹ்ருதயத்தில் எப்பொழுதும் வாஸம் செய்கிருள் காமாட்சிதேவி.

எது உன்னை மோஹத்தில் ஆழ்த்தி மயங்கச் செய்கிறதோ, அதைத் திருப்பித் தியானபூர்வமாக ஈச்வராம்சம் பொருந்தியதாக எண்ணி, உள்ளத்திலே பூஜிக்கும் போது, மோஹத்திலேற்பட்ட மயக்கம் தீர்ந்து அருள் உண்டாகி, காமாக்ஷிதேவி தர்சனம் உண்டாகிறது.

ஒரு கிராமத்தில் தம்பதிகள் இருவர் வாழ்ந்துவந்தனர். அவர்களுக்கு ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணுக்குக் காமாக்ஷி யென்றே பெயரிட்டனர். ஒரு நாள் ஸாது ஒருவர் அவர் வீட்டுக்குப் பிக்ஷைக்கு வந்தார். தம்பதிகளும் ஸாதுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து பிக்ஷையளித்தனர். ஸாதுவும் அவர்களை ஆசிர்வதித்து, மகளாகிய காமாக்ஷியைக் கூப்பிட்டு அருகில் நிறுத்திக்கொண்டு தம்பதிகளிடம் மொழியலானுர். "இந்தக் குழந்தையின் பேர் காமாக்ஷி! காமாக்ஷியென்ற பதத்திற்கு முடிவைக் காண்பீராகில், நீங்கள் உலகத்திற்கே தாய்தந்தையர்களாவீர்கள்" என்று மொழிந்தவராய், வெளியே சென்றுவிட்டார்.

தம்பதிகளும் தம் குழந்தையைத் தெய்வமாகக் கருதி உபசரித்து வந்தார்கள். இவர்களிருவருக்கும் குழந்தையை உபசரிப்பதிலேயே நேரம் கழிந்தபடியால், இன்னும் குழந்தைகள் பிறக்கவேண்டுமே என்ற சிந்தனையின்றி, தம்பதிகள் இருவரும் காம இச்சையுமில்லாதிருந்தார்கள்; பெண்ணுக்கு மணப் பருவம் வந்தும், அவர்களுக்கு மணம் செய்து வைக்க வேண்டுமென்னுஞ் சிந்தனையும் இல்லாதிருந்தார்கள். தாய் தந்தையர்களுடைய தெய்விக உபசாரத்தால் பெண்ணும் மிகுந்த தேஜசுடன் முகவொளி வீசிக்கொண்டிருந்தாள். அவளும் கல்யாணமொன்றுண்டு என்பதையும் அறியாமல், "தான் ஈச்வரியின் அம்சம்! என்றே எண்ணி இருந்தாள். "இந்தக் கன்னிப் பருவத்திலேயே இருந்து, எங்கும் நிறைந்த பரமாத்மாவிடம் சேர்ந்து ரமிப்பதான சாந்தி கல்யாணமே நான் செய்வேன்!" என்றவளாகத்

தினமும் எண்ணிக் கொண்டே இருந்து பரிசுத்த ஹ்ருதயத்துள் ஈச்வரஸ்வரூபத்தைக் கண்டு சாந்தியடைந்து இரமித்தாள்.

இவ்வுலக ஆசையை நீக்கிப் பற்றுதலில்லாமலிருந்த பற்பல பக்தர்களுக்கும் தன் அநுபவத்தைக் காட்டித் தன் குலத்தையே பரிசுத்தமடையச் செய்து காமாக்ஷிதேவியாகவே பிரகாசித்தாள்.

காமாக்ஷிதேவி தம் விஸ்தார ஹ்ருதயத்துள் பரமாத்மாவாகிய ஈச்வரரைக் கண்டு ஈச்வராநந்தம் கொண்டாள். அதைப்போலச் செய்து ஸித்தியடைந்த பெண்களும் "நாம் குழந்தைகளைப் பெறுவதற்காகக் கல்யாணம் செய்து கொண்டோமில்லை. அது ஈச்வராநந்தம் கொள்வதற்கே. தம்மை மணந்து கொண்ட புருஷனைக் குருவாகக் கொண்டு உபதேசம் பெற்று, ஹ்ருதயத்துள் சாந்தி கல்யாணம் அடைவதற்கே நாம் பெண்ணாகப் பிறந்தோம்!" என்றுள்ள உறுதியை விசேஷ சக்தியால் உணர்ந்த பெண்களைத் தேவிமார்களாகப் போற்றுகிறோம்! அவர்களே தீர்க்க ஸுமங்கலிகளாவர்.

இன்றைய உலகைப் பார்க்கும் அளவில் மக்கள் அறிவீனத்தில் கெட்டுப்போவதைப் பார்க்கிறோம்! காரணம் ஸஹவாஸ தோஷம்! ஸத்ஸங்கங்களுடைய சேர்க்கையேயில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆதியில் அவதரித்த ஸாவித்திரி, ஸீதை, போன்றவர்களே மீண்டும் பூமியில் அவதரித்து இவர்களைத் திருத்த வேண்டும்.

பத்துப் பெண்கள் கூடி ஒன்றைத் தைரியமாகச் செய்துவிட்டால், நூறு ஆண்கள் வந்து தடுத்தாலும் அதைத் தடுக்க முடியாது. பெண்களுடைய ஒழுக்கம் தவறி நடப்பதான செய்கையைத் தடுக்க, காமாக்ஷிதேவியின் அம்சம் கிளம்பிப் பெண்ணாக ஜனித்து, பதி சிச்ருஷையினாலேற்படும் (பாதிவ்ருத்ய சக்தியினால் ஏற்படும்) சக்தியைக் கொண்டு அவைகளை அடக்கினால் மட்டுமே கதியுண்டு!

முன்காலத்திலோ எங்கேயோ ஒரு அவதார புருஷர் இருக்க, அவரால் உபதேசிக்கப் பட்டதைக் கேட்டு நடந்து வருவார்கள்; யாவரும் க்ஷேமத்தை அடைவார்கள். இக் காலத்திலோ கண்டவிடமெல்லாம் அவதார புருஷர்கள் இருந்தும்கூட, அட்டூழியம் நிற்காத காரணம் பெண்களுடைய கோரமான செயலேயாகும்.

எங்கேயோ காமாக்ஷிதேவியின் அம்சமாகிய பதிவ்ருதைகளுடைய தரிசனத்தைக் கண்ட மஹான்கள் தம்முள்ளத்தைச் சிதறவிடாமல் (அட்டூழியம் செய்பவர்களுடன் சேராது) தேவியின் அம்சமாகக் கண்டு ஆனந்திக்கிறூர்கள்.

வருணாச்சிரமதர்மத்தை அநுசரித்தோ சிறிதும் அநுசரியாமலோ இருந்தாலும், மனிதவாழ்க்கைக்குத் தகுந்ததைத் தெரிந்து கொள்ளவேண்டும்; பின்னர் வாழ்க்கையை நடத்தவேண்டும்; 'மனதுக்கு மேல்பட்ட வஸ்து ஒன்று இருக்கிறது. நாம் செய்வதான கெடுதலோ நல்லதோ நம்மையே வந்தடையச் செயகிறது அது' என்பதை அறியும் போது, நீ செய்யவேண்டிய நியமங்களில் தவறி நடக்க உன் உள்ளம் சம்மதிக்காது.

ஒரு கிராமத்தில் ஜகந்நாத பண்டிதர் என்னும் ஒருவர் இருந்தார். அவருக்குச் சுப்புலக்ஷ்மி என்ற ஒரு உத்தம பத்தினி உண்டு! இத் தம்பதிகளுக்குப் பல குழந்தைகள் இருந்தனர். ஜகந்நாத பண்டிதரோ ஊர் ஊராகச் சென்று வேதாந்தப் பிரஸங்கங்கள் செய்து பல பட்டப் பெயர்களைப் பெற்று புகழுடன் விளங்கினுர். ஆனுல் அவருக்கு ஒரு குறை இருந்தது. 'நம் சம்சாரம் அக்ஷராப்யாசம் இல்லாதவளாய் இருக்கிருளே!' என்பது அக்குறை. அது அவமானத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. ஒருநாள் தம் பத்னியை அழைத்து, "நீ அக்ஷராப்யாசம் செய்து பாகவதம் முதலிய பற்பல கவிகளையும் படித்து உண்மையை அறிய வேண்டும்" என்ருர். இதைக் கேட்ட சுப்புலக்ஷ்மி அம்மாள் "இனிமேல் நான் அக்ஷராப்யாசம் பெற்று யாருக்குக் குருவாகப் போகிறேன்? உங்களைப் போலுள்ள மஹா

னுக்குச் சிச்ருஷை செய்வதை விடவா, படிப்பில் இன்பம் இருக்கிறது. நம் குழந்தைகளுக்குச் செய்யும் தொண்டு நம்மை ஈடேற்றுமென்று செய்கிறோம். நம்கடமை என்று தானே செய்கிறோம்! இந்தப் பற்றற்ற தொழிலைச் செய்வதை விட்டா இன்னொரு வித்தையைக் கற்கவேண்டும்?'' என்றாள். இதைக் கேட்டதும் பண்டிதர் ''நான் உன்னைப் படிக்கச் சொன்னால், ஏதாவது சொல்லிப் பேச்சை மாற்றி விடுகிறாய்! ஏதாவது செய், போ'' என்றார்.

இப்படிச் சிலநாள் கழியவே, ஒரு சாது அவர்கள் வீட்டிற்குப் பிக்ஷைக்கு வந்தார். பண்டிதர் மிக்க வணக்கத்துடன் ஆசார உபசாரம்செய்து பிக்ஷையளித்தார். சாது பண்டிதரை நோக்கி, ''ஓ பண்டிதரே, நீர் படித்தவராக எண்ணி உம் சம்சாரத்துக்குப் படிப்பில்லையே என்று கவலைப் படுகின்றீர். அவள் படிப்பின் உண்மையை அறிந்தவளாய், தன் சரீரத்தாலே முடிந்தவரை மக்களுக்கும் உமக்கும் மனப்பூர்வமாகத் தொண்டு புரிகின்றாள்; இன்னும் அக்கம்பக்கத்தில் உள்ள வீடுகளிலும் தன்னாலியன்றவரை உபகரித்துவருகிறாள்! இந்த நிஷ்காம கர்மத்தினாலே தன் உள்ளத்தில் பரிசுத்தமடைந்தவளாக காமாக்ஷி தேவியின் அம்சத்தைப் பெற்றிருப்பதை நான் பார்க்கிறேன்'' என்றார். இதைக் கேட்டதும் ஜகந்நாத பண்டிதர், ''ஹா! ஹா! இப்படியுள்ள பகவத் அம்சமாகிய பதிவ்ருதையைக் கைப்பிடித்து வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டதினாலேதான், என்னுடைய பாண்டித்தியம் சுடர்விட்டெரிந்து சோபிக்கிறது!'' என்று எண்ணினார் தம்பதிகள் கைவல்லியத்தை அடைந்தார்கள்.

வடுமாங்காயை நெடுநாள் ஜாடியில் அடைத்துவைத்துத் திரும்பியே பார்க்காது, மறுபடி எடுக்கிற தருணத்தில் பாசங்களை நீக்கி எடுக்கவேண்டுமல்லவா? அதேபோல, நெடுநாளாக தன்னைத்தானே மூடிக்கொண்டு பாசங்களாலே தன்னை மறைத்துக்கொண்டிருப்பது பாபம்! காமாக்ஷிதேவியைத் தியானித்துத் தியானித்து ஒளிவரச்செய்து, சிறிது சிறிதாகப் பாசத்தை, நீக்க முயல்க. தியானம் கைகூடி

மனம் ஒரு முகப்பட்டபோது பாவமும் புண்யமு மில்லாத பரிசுத்தத்தன்மையை அந்தர் முகத்தில் விளக்கிக் காட்டு வாள் காமாக்ஷி தேவி.

சம்புவினுடைய விஸ்தார ஹ்ருதயத்தில் வாஸம் செய்யக் கருதினுள் காமாக்ஷி தேவி. சம்பு தம்மை மோஹிக்கச் செய்வதான கடைக்கண் பார்வையைக் கண்டு ஆநந்த மடைந்து, தம் ஹிருதயத்தைச் சுத்திசெய்து கொடுத்தார். அதைப்போல நீயும் உன் உள்ளத்தைப் பரிசுத்தமாக்கினுல், அழைக்காமலே காமாட்சியின் அருட்பார்வை உன் உள்ளத்தில் வந்து அமரும்.

'சிவப்பு ஒரு அழகு! சுடச்சுடச் சாப்பிடுவது ஒரு ருசி, என்று சொல்வார்கள்! சிவப்பாயிருக்கும் ஒரு வஸ்துவைக் காணும்போது முனிவர்களும் மயங்குவார்கள். அது தன்னை அறியாமல் எப்படியோ மனத்தை இழுத்து விடுகிறது. அந்த மயக்கத்தைத் தவிர்க்கவே சிவப்பினுலேயே (குங்குமத்தாலே) தேவி பூஜை செய்கிருர்கள். சூடாக எந்தப் பதார்த்தத்தையும் சாப்பிட்டால், நாக்கிற்கு ருசியாகவே இருக்கும். இதைப்போலவே, தம் குருவிடமிருந்து உபதேசம் பெற்ற மந்திரத்தைச் சூட்டோடு சூடாய் அப்பொழுதே ஜபித்து ஜபித்து நாவை அடக்கவேண்டும்! நல்ல சிவப்பு நிறமுடைய ஒரு யௌவனப் பெண், எதிரில் நிற்கும் போது, தன்னை அறியாத ஒரு சக்தி பார்த்த பார்வையிலேயே நின்று குழப்பமடையச் செய்வது தான் மாயை என்பது. இந்த மாயையை ஜயிக்க அருணனெளிக்கு ஸமானமான காமாக்ஷி தேவியைத் தம்முள்ளே ப்ரதிஷ்டை செய்து, மனேபூஜை முதலியவற்ருல் தேவியின் பாதத்தண்டையிருக்கும் ஸ்ரீ சக்கரத்திலே சிவப்பான குங்குமத்தை அர்ச்சிக்கும் போது, அந்த மாயை நம்மை விட்டு விலகுகிறது.

மாதாவால் இச் சரீரத்தைப் பெற்று, பிதாவால் பரத்திற்கு வழிகாட்டும் அறிவையும் பெற்று, நாமே நம்முடைய சத்கர்ம பலத்தினுல் ஜீவன் முன் நினைத்து உயிர்விட்டபடி

கேட்டல், காணல், மோத்தல், ருசிபார்த்தல் ஸ்பர்சம் என்னும் வாசனைகளை எடுத்துக்கொண்டு, கர்ம மனிதராகப் பிறந்தோம். இனி அந்தக் கர்மங்களுக்கு அகப்படாமல் இவ்வுலக முழுதுக்கும் ஆதிமாதா ஆதிபிதா இருப்பதை அறி என்பது காமாக்ஷிதேவியின் உபாசனையினாலே அந்தர்முகத்தில் உணரக்கூடியதாகும்.

நாம ரூபங்களைக் கடந்த ஈச்வர ஹிருதயம் எதனால் களிப்புறுகின்றதோ அது காமாக்ஷதேவியின் க்ருபை என்னும் நாட்டியப் பெண்ணின் ஆடலாகும்.

ஸ்தூல சரீரத்திற்குப் பஞ்சேந்திரியங்கள் இருப்பது போல. ஸூக்ஷ்ம சரீரத்திற்கும் பஞ்சேந்திரியங்கள் இருக்கின்றன. இந்த அனுபவத்தை உணரவேண்டுமானால், காமாக்ஷிதேவியை உள்ளத்தில் கண்டு பூஜிக்கும்போது பஞ்சேந்திரியங்களுடைய வேறுபாட்டைப் பார்க்கலாம். வெளியிலுள்ள பஞ்சேந்திரியங்கள் தன்னுடைய சொற்படி நடக்கும்படியான நிலைமையில் இருக்கும்போது, சூஷ்ம சரீரத்திலுள்ள பஞ்சேந்திரியங்களுடைய நற்செய்கைகளை உணர்ந்து கொள்ளலாம்.

(உபாசகன் கஷ்டமான இடங்களில் அகப்பட்டுக் கொண்டு வருத்தமடைகிற கட்டம் இங்கே கூறப்படுகிறது.)

நெஞ்சே, ஆசார உபசார மில்லாத இடத்தில் அகப்பட்டுக் கொண்டோமே என்று கவலைப்படாதே. இப்படியும் சில நாள் கழிந்தால்தான், அடுத்ததாகப் போகுமிடத்தில் நீ விசாரிக்காதபடி பல காரியங்சுள் உன்னையே மறந்து பிரமித்திருக்கும்படி நடக்கும்! ஓர் இடம் வருத்திய கஷ்டம் இன்னொர் இடத்தில் பயனைக் கொடுக்கும். அதற்காக விருப்பமோ வெறுப்போ கொள்ளக்கூடாது. எல்லாவற்றையும் சமத்துவமாகப் பார்த்தால்மட்டுமே காமாக்ஷி தேவி உள்ளத்தில் ப்ரசன்னமாவாள் என்பதை அறி.

(தரிசனம் கண்டு ஆனந்திக்கிற கட்டம்)

ஹே! காமாட்சி, நீ ரூபமுடன் என்னுள்ளே காட்சி யளித்தாலும் எங்கும் நிறைந்த பொருளின் ஒரு சக்தியாகத் தோன்றிக் காட்சியளிப்பது போலவே காண்கிறேன் இவ் வளவு தேஜோமய ஸ்வருபமாக முன்னிருந்து கொண்டு, என் யோக க்ஷேமங்களையும் நடத்துகிறதினாலே அவ்வாறு தெரிந்து கொள்கிறேன்.

கனம் ஜோதிஸ்வரூபமாக இருக்கிறது. ஜோதிக்குள் இருப்பது ஜீவன். இந்த ஜோதியையும் கடந்து ஜோதிக் குள் நுழையும்போது தான் பரமாத்மாவினுடைய செயலே ஜீவனாகவும், மன தாகவும், அறிவாகவும், அஹங்காரமாக வும் வெளிப்பட்டுத் தோன்றி தன்னை மறைக்கிறது. இந்த உண்மையை காமாட்சிதேவியின் உபாசனையினாலே நம்முள் ளத்தில் உணர்ந்துகொள்ளலாம்.

உயிரும் உடலும் சில நாள் கூடி யிருக்குமே ஒழிய, உயிருக்கும் உடலுக்கும் சம்பந்தம் கிடையாது! இவ்விரண் டையும் சேர்க்குந் தன்மை உடையவன் ஒருவன் இருக்க வேண்டுமல்லவா! இல்லாவிடின், உயிரும் உடலும் இவ் வளவு ஸ்நேஹம் பெற்று வாழ முடியுமா? இந்த உண் மையை காமாக்ஷி தேவியைத் தம் ஹிருதய கமலத்தில் பூஜித்துக் கூடும்போது, இந்த உடல் இந்திரியங்களைப் போலவே, உள்முகத்திலும் பஞ்சேந்திரியங்களாலே பூஜிப் பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்! இவ்வுடலி லிருக்கும் பஞ்சேந்திரியங்கள் அல்லாது, ஒரு தனிப்பட்ட பஞ்சேந்தி ரியங்கள் உள்ளத்தில் தாமாகத் தம் தொழிலைச் செய்து கொண்டிருப்பதைக் காணலாம். இந்தப்படி உள்ளத்தில் இருப்பது போலவே, வெளி இந்திரியங்களையும் சேர்த்து விட்டால், உயிர் நிலையும் உடல்நிலையும் உடலும் உயிரும் சேர்ந்த இம்மனித நிலையும் அறிந்து கொள்ளலாம்.

மனம் ஜோதி ஸ்வரூபமானபடியினாலே அந்த ஜோதி யின் நடுவில் காமாக்ஷி தேவியைப் பூசித்து வரவேண் டும்! அப்போது அதிலிருந்து கிளம்பும் ரச்மிகள் அருள்

நிறைந்திருப்பதாலே, இந்திரியங்களை ஒரு முகப்படுத்தச் சுலபமாகும்.

நம் முயற்சியினாலே மனம் ஞான வடிவமாகி ஜோதி சாக அருளைக் காட்டும்போது, ஜோதிக்குப் பின்னால் அகண்ட சிதாகாயம் தோன்றும். இப்படித் தம் மன்தாகிய ஜீவனை, காமாக்ஷிதேவியின் உபாசனையினாலே ஜோதிக்குள் லயிக்கச் செய்து. அகண்ட வொளியாகப் பிரகாசிக்கும் போது நான் ப்ரம்மம் என்ற மட்டில் கொண்டுவிட்டு நிர்விகல்பம் கொள்ளச்செய்த ஆநந்தத்தை வெளியிட்டுச்சொல்ல இயலாது. இப்படிச் சிறிது நேரம் நிர்விகல்பம் கொள்ளச் செய்து, பாஹ்ய விஷயங்களுக்கு வரும்போது பற்பல அநுபவங்களினாலே ஈச்வர லீலையை வரைந்து, மக்களுக்கும் அறிவிக்கும்படி செய்கிறது.

ஸ்ரீ மீனுக்ஷி

பூமிக்கு நடுப்பாகத்திலே (மூலாதாரத்திலே) காமாக்ஷி தேவி திவ்யதேஜசுடன் விஸ்தார மணல்திட்டில் சஞ்சரிக்குமிடமானது காஞ்சீ நகரம்; பூமிக்கு ஹிருதய ஸ்தானம் மதுரா நகரமானபடியால், பரமஹம்சர்கள் தம் உள்ளத்தில் கண்டு ஆனந்தமடைந்த திவ்ய மூர்த்தியை ஸ்ரீ மீனுக்ஷியாக ஸ்தாபனம் செய்து, பரிசுத்த ஹிருதயம் போல மதுராபுரியை அலங்கரித்தார்கள். நாம் நம்முடைய ஹிருதயத்தை, ஹிருதயகமலம், என்போமல்லவா? மதுரா நகரத்தை 'பத்ம புரியில் வளர் மீனுக்ஷி!, என்று கொண்டாடுவதன் கருத்தும் அதுவேயாகும்.

ஹிருதயத்துள் கண்டு ஆனந்தமடைந்த பக்தர்கள் தம் நாவினுல் இனிமையாக அழைத்துக் கொண்டாடப்படும் கரமே மதுரா நகரம்.

விசாலமடைந்து ஹிருதயத்துள் பரிசுத்தத் தன்மையைக் காணவேண்டுமானுல், மீனுக்ஷி தேவியை உபாஸிக்க வேண்டும்!

ஜலமலங்கள் மோதும் தாய் வயிற்றில் கிடந்த குழந்தைக்கு அறிவு ஏற்பட்ட அரை நாழிகைக்கெல்லாம் வெளி வந்து விடுகிறது. கருவில் கிடந்த குழந்தை பத்துமாத காலமாக அறிவில்லாமல் கிடந்ததை அறிவு வந்ததும் 'இனி இங்கே ஒரு வினுடிகூட இருக்கக்கூடாது இந்த ஜன்மம் வேண்டவே வேண்டாம்! ஈச்வரா, எதன் பொருட்டும் இந்த மாதிரியுள்ள நரகம் வேண்டவே வேண்டாம்! இனி உன்னைச் சரணமடைந்தால் மட்டுமே கதிமோக்ஷம் உண்டு!' என்ற சிந்தனையுடன் தாய் வயிற்றிலிருந்து வெகு கஷ்டத்துடன் சதைகளை நீக்கிக்கொண்டு வெளிவருகிறது. இதன் கஷ்டத்தினுலேதான் தாய்க்கு வருத்த முண்டாகிறது. இதைப்போல, அறிவைப் பெற்ற நாம் ஆதிதாயாக மீனுக்ஷி தேவியை ஹிருதயகமலத்திலே உபாஸித்து, கர்ப்ப க்ரஹமாகிய மூலஸ்தானத்திலே அறிவைக் செலுத்தி, வந்த வரவை

மறவாமல், தாயின் பாதகமலத்தில் சேர்ந்து, சாந்தி அடைய வேண்டும்.

கருவி லிருக்கும் குழந்தைக்கு ஞானம் ஏற்படாவிட்டால் வெளிவராது என்பது நிச்சயம்! ஞானத்துடன் பிறந்த பிற்பாடுதான் பல சேர்க்கையினுலே மறந்துவிடுகிறது. பிறக்கும்போதுள்ள குழந்தையைப் பூமியின்மேல் விழாது தங்கத்கட்டில் ஏந்திய அரண்மனையில் ஒரு குழந்தை பிராமணனுக்காக ஞானம் பேசிற்று என்பதைக் கேட்டிருக்கிறேமல்லவா? ஸ்பர்ஸம் ஏற்படுமுன் ஞானம் நிறைந்திருக்கிறது என்பது நிச்சயம்! ஸ்பர்சம் ஏற்பட்டதும். தன்னை மறந்து விடுகிறது.

இதைப் போலவே சிறிது யௌவன மடைந்தவன் ஸ்பர்சத்தையும், மணப்பதையும், பார்ப்பதையும், கேட்பதையும், ருசிபார்ப்பதையும் உள்ளத்தில் மீனுக்ஷி தேவி உபாசனையின் மூலம் திருப்பினுல் தன்னை மறக்கடிக்கும் ஒரு சக்தி மீனுட்சி தேவியிடமிருந்து திவ்ய வொளியாகத் தோன்றி, முழு அறிவையும் காட்டுகிறது. இந்த உபாசனையின் மூலம் ஏற்படும் அறிவைக்கொண்டு, நாம் வந்த வரவின் வழியாக மீனுக்ஷிதேவி தர்சனத்தினுலே விசாலமடைகிறது.

மீனுக்ஷிதேவியை உபாஸித்தவனுடைய கண்கள் உள் நோக்கிச் சென்றபடியினுலே, அரைக்கண்களாகத்தான் வெளியில் பார்க்க முடியும்! எந்த அழகுடைய பெண்மணிகளைப் பார்த்தாலும், மீனுக்ஷிதேவியைப் போலத் தன் உள்ளத்தில் கண்டு ஆனந்திப்பான்.

மதுரா தேவியினுடைய புன்சிரிப்பென்னும் நிலாவானது பக்தனுடைய உள்ளம் ஒளியுறச் செய்கிறதினுலே, அவ் வொளியில் குழந்தையாக விளையாடிக் கொண்டிருக்கிருன்.

கேட்பது, பார்ப்பது, மோப்பது முதலிய இந்திரியவாசனையை இழந்து செல்லும் ஜீவன் உடலை நாடி வரும்போது கருவில் புகுந்தபின்னரே குழந்தை உருவமாகிறது, ஆகவே இந்தப்படி, உடலையும் ஜீவனையும் சேர்த்து வைக்கும்

பெருமை வாய்ந்த சக்தி அனுதியாக ஒன்று இருந்தேயாக வேண்டும்! அதைத் தான் மீனுக்ஷியின் உபாசனையினுலே அந்தத் திவ்ய க்ருபா சக்தி என்று உணரவேண்டும்.

தம்முள் குண்டலினி சக்தி பாம்பாக வளைந்து இருப்பதின் நடுவில் திவ்ய தேஜோமயமாக விளங்கும் மீனுட்சி தேவியைத் தரிசித்தவனுடைய அனுபவத்தைப் போலவே, மதுரா நகரம் இவ்வளவு அகலமும் இவ்வளவு நீளமும் இருக்கிறது பார்!'' என்று ஸ்ரீ சோமசுந்தரர் கையில் தரித்த பாம்பைக்கொண்டு அளந்து காட்டி, ஸ்ரீ குலசேகர பாண்டியனுக்கு விளக்கினுர். ஆகையினுலே மதுரா நகரத்திற்கு 'ஆலவாய்' என்று பெயர் உண்டாயிற்று! முதன் முதலில் நம் உள்ளத்திலிருந்து குண்டலினி சக்தியாகிய சர்ப்பத்தின் வாயின் மூலமாகத்தான் அருள் என்ற அக்னி கிளம்பி, தீச்செயலை நீக்கிய பின்னர்தான், மீனுட்சிதேவியின் திவ்ய தேஜஸைக் காணக் கிடைக்கிறது.

ஸ்ரீ மலயத்வஜ பாண்டியனுக்கு இரண்டு மூன்று பத்தினிகள் இருந்தும். குழந்தை இல்லை! தினமும் தம்பதி சமேதராகக் கோவிலுக்குச் சென்று மீனுட்சியைத் துதி பாடிப் பூஜித்துவருவது வழக்கம்! ஒரு நாள் மீனுட்சி விக்ரஹத்தைக் குழந்தையைப்போல அலங்காரம் செய்திருந்தார்கள்! உடனே கண்ணீரும் கம்பலையுமாக நின்ற மலயத்வஜன் துதிக்கலானுன் ''ஓ மீனுட்சி எனக்கு குழந்தைகள் இல்லையே என்று ஏங்கினேன். குழந்தை உருவமாகி உன்னைக் கண்டதும் அந்தக் கவலை நீங்கிற்று! இந்த அலங்காரமாயிருக்கும் திருக்குழந்தையைப் போலவே எனக்கு குலக் கொழுந்தாக விருந்து ராஜதானியை மகிழ்விக்க வேண்டுகிறேன் ஓ பக்தவத்சலனீ அம்பிகே'' என்று மன முருகினவனுக நின்ற ராஜனுக்கு, குழந்தையாகவே காட்சி கொடுத்து அதே அலங்காரத்துடன் சிரித்துக் களித்துக் கொண்டு மூலஸ்தானத்தி லிருந்து கிளம்பி அரசனிடம் வந்து, ''உனக்கு என்னவேண்டும்?'' என்று தாய் வினவினுள். உடனே மலயத்வஜனும், '' தாயே இந்த உருவத்துடனேயே எனக்குச் சேயாக வரவேண்டும்!'' என்ருன். அப்

படியே விக்ரஹத்திலிருந்து கிளம்பி, திவ்ய தேஜோமய குழந்தையை தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். சாதாரண குழந்தைகளுக்கு இரண்டு ஸ்தனங்களே காணப் படும்! இந்த திருக்குழந்தைக்கு மூன்று ஸ்தனம் காணப் பட்டபடியினாலே ஆரூடம் வைத்துப் பார்த்து, "இந்த மூன் றாவது ஸ்தனம் யாருடைய கண்பார்வையினாலே மறை யுமோ, அவர் தாம் இந்தத் திருக்குழந்தைக்கு நாதன்!" என்று அறிந்தார்கள். (மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண் பிறந்தவர்களுக்கு மூன்றாவது ஸ்தனத்திலிருந்து ஞானப்பால் அருளுந் தாயே மீனாட்சி யென்பதை நிச்சு யித்து விடலாம்) மூன்று கண்களுடைய சங்கரா ஸோம சுந்தரராக வந்தபோது, மலயத்வஜன் குமாரியாகிய மீனாட்சியினுடைய மூன்றாவது ஸ்தனம் வெட்கத்தால் மறைந்தது. உடனே மீனாட்சி கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. இதுபோல மீனாட்சி தேவியின் உபாசனை யினாலே தியானத்தைக் கூடி நிச்சலத்தன்மையிலிருக் கும்போது நெற்றியில் மூன்றாவது கண் தோன்றியதும், மீனாட்சி தாயாக வந்து அமிர்தமென்னும் பாலைப் பக்த னுக்கு ஊட்டுகிறார்கள் என்பது இதனால் நாம் தெரிந்து கொள்ளக்கூடியதாகும்.

ஒரு திவ்ய விக்ரஹத்தில் எங்கும் நிறைந்த பொருளை ஆவாஹித்து, ஏகாக்ரசித்தமுடன் பூஜித்துவந்தால் அந்த விக்ரஹம் உயிர்பெற்று வாழ்ந்து பக்தனுடைய அபீஷ்டத் தைத் தீர்த்து இரக்ஷிக்கிறது.

தெளிவிட முடியாதது ஆகாயம்! அதன் நிறத்தைப் போலவே நீலக்கல்லால் செய்யப்பட்ட விக்ரஹம் மீனாட்சி ஆகாயத்திற்குச் சந்திர சூரியர்கள் நக்ஷத்திரங்கள் அலங் காரமாக இருப்பதுபோலவே, ஸ்ரீ மீனாட்சிக்கும் பற்பல ஆடை ஆபரணங்களை அணிவித்துப் பூஜித்து வரும்போது! தெளிவுபட முடியாத எங்கும் நிறைந்த ஒரு சக்தியின் அம்சம் நம்முள்ளத்தில் தோன்றி அவதார புருஷராக்கும் தன்மை மீனாட்சி உபாஸனையினால் உண்டாகிறது.

ஸ்வாதிஷ்டான சக்ரமாகிய சிதக்னிகுண்டத்தில் அக்னி தத்வத்தைக் பிரார்த்திக்கும்போது, ஸங்கல்ப மாத்திரத்தினுல் பிரளய காலாக்னிபோல் நெற்றியில் தோன்றச் செய்து ஸமயத்திற்குத் தகுந்தபடி வடிவெடுக்கும் ஸ்ரீ மீனுட்சி சந்திர கலையாகத் தோன்றி, பிரளய காலாக்னியைக் கருணையுடன் பார்த்ததும், அம்ருதவர்ஷமாக மாறிவிடுகிறது.

நம் உள்ளத்தில் ஈச்வர சக்தி மேகம்போல் நின்றுகொண்டிருக்க மீனுட்சியினுடைய பொன் முறுவலென்னும் மின்னல் தோன்றியதும், சரமாரியாக அருள் மழை உண்டாகிறது.

மீனுட்சிதேவியினுடைய மையிட்ட விசாலக் கண்களுள், வலக்கண் பகலைக் குறிக்கிறது. இடக்கண் இரவைக் குறிக்கிறது. சந்திரா காலத்தைக் குறிக்கிறது நெற்றிக்கண்! இந்தப்படி சிவப்பு, வெளுப்பு, கறுப்பு என்ற நிறத்தோடு சோபிப்பதை பிரம்மா விஷ்ணு ருத்ரர்கள் பார்த்துப்பார்த்து லயமடைந்திருக்கிருர்கள். சமயம் நேரும்போது தேவியே சத்வம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களைக் கொண்டு இவர்களை ஸ்ருஷ்டித்து, உலக க்ஷேமத்தை நடத்தும்படி செய்கிருள். இந்த முக்குணங்களை ஸ்ருஷ்டித்த தாயாகிய மீனுட்சிதேவியை உபாஸிக்கும்போது த்ரிமூர்த்திகளுடைய நிலைமையும் தம்முள்ளே அடங்கி இருப்பதைப் பார்க்கலாம்.

மீனுட்சிதேவியின் முகவிலாசத்திலிருந்து பொழியுஞ் சந்திரிகையை உள்ளத்தில் கண்டவர்கள், இருள் மூடிய தினத்திலும் பூர்ண சந்திரனைக் காண்பார்கள்.

உதாரணமாக, ஒரு கிராமத்தில் அந்தணரொருவர் மீனுட்சிதேவியை உபாசனை புரிந்துகொண்டு வந்தார். கிராமவாஸிகள் 'இவர் ஒரு பக்தர்' என்றுதான் நினைத்திருந்தார்கள். அப்படியிருக்க, ஒருநாள் அவ்வூருக்கு இன்னெருதேவி உபாசகர் வந்தார். அவர் தேவியைப் புகழ்ந்து பல பிரசங்கங்கள் செய்வதுடன், பல உபதேச மந்திரங்களையும் ஓதி வந்தார். கிராமத்திலிருப்பவர்கள் யாவரும் அவரைக் கொண்டாடி வந்தார்கள். இந்தப் புகழையும் மதிப்பையும் பெற்ற அவருக்கு கர்வம் உண்டாகிவிட்டது. இன்னும்

யாராகிலும் உபாசகர் இருந்தால் அவர்களைக் கெடுக்கவும் கருதினர். அப்படியிருக்க, மீனாட்சியை உபாஸித்து வந்த சாந்தகுணமுடைய அந்தணர் அங்கே வந்து, பிரசங்கம் செய்யும் அவரை நோக்கி, "ஒய் உம்மிடம் நான் சில கேள்விகளைக் கேட்கவேண்டும்" என்று உட்கார்ந்தார் அவரும், "கேளுங்கள்! சொல்கிறேன்" என்றார். மீனாட்சியை உபாஸித்த சாது பக்தரும் கேட்கலானார். 'இன்று அமாவாசை! தேவியை உபாசித்தவனுடைய உள்ளம் பூர்ண சந்திரனைப்போலக் காணப்படும்! ஆகையால் நீர் தேவி உபாசகராயிருந்தால் பூர்ண சந்திரனை இன்றே காண்பிக்கவேண்டும்" என்றார். இதைக் கேட்டதும் கர்வமடைந்த உபந்யாசகர் தயங்கிப் பலவாறு உரையாடி, சரியான பதிலைச் சொல்லாமலிருந்தார். பின்னர் அவருக்கே ஒரு யோசனை தோன்றி. "ஒய், நீர் சொல்லுகிறீரே உம்மால் காட்ட முடியுமா?" என்று திருப்பிவிட்டார். உடனே ஸ்ரீ மீனாட்சி உபாசகர் தம்முள்ளத்தின் கண்ணிலே தேஜோமய ஸ்வரூபமாக விளங்கி கொண்டிருப்பதை நினைத்து, தியான நிஷ்டை கூடி, முக்காற்பங்கைத் திவ்ய தேஜஸில் நிறுத்திய மனதுடையவராய் ஜன்னல் கதவைத் திறந்ததும், பூர்ண சந்திரன் உதயமாயிருப்பதைக் கண்டார்கள். உடனே உபந்யாசகர் இவர் காலிற் வீழ்ந்து தம் கர்வத்தை ஒழித்து, மீண்டும் தேவியின் திருவருளைப் பாராட்டினர். இதனால், தேவியின் திருமுகமண்டலத்தில் அநேகம் கோடி சந்திரிகைகள் இருந்து வருகின்றன என்பதை நாம் அறியவேண்டும்.

நம்முடைய மனோராஜ்யத்திலிருக்கிற அறிவானது, வேதமந்திரங்களில் நடமாடுதற்கு சந்தஸ்ஸுகளாகிய கால்களைக்கொண்ட விருஷபத்தின் மேலேறி சஞ்சரித்து சஞ்சரித்து வேதங்களுடைய முடிவைச் காணுமலிருந்தபோது, உள்ளத்திலிருந்து பராசக்தியினுடைய பார்வை வந்ததும், அனுபவஸித்தமாகக் காட்டி அழைக்குந் தாயாகிய ஸ்ரீமீனாட்சியை உபாஸிக்கவேண்டும். இந்தப் பாவனையில் காண்பது தான் அநுபவம்.

நான்கு வேதங்களைக் கால்களாகக் கொண்ட ஸ்வரூபம ரிஷபமாக நிற்கும்போது, அதன்மேல் மூன்று கண்களுடைய பரமசிவன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இப்படி இந்த வேதஸ்வரூபத்தின் மேல் இருந்த ஈச்வரனும் கூட மீனாட்சிதேவியினுடைய முகமண்டல வெளியைக்கண்டதும், அவ்வொளியைப் புசித்துப் புசித்துப் பசிதீர்ந்தவராக இருக்கிறார். ஈச்வரனுக்கு இப்பேர்ப்பட்ட ரிஷபத்தை அருளிய பராசக்திக்கு சதா நமஸ்காரம்.

ஈச்வரனுடைய விசால ஹிருதயகமலம் மிக மிருதுவாக இருப்பதனால், கரடுமுரடான உப நிஷத்துக்களில் சஞ்சரித்ததால் பாதம் சிவந்து விட்டதைத் தனித்துக்கொள்ள ஈச்வர ஹிருதயத்திலமர்ந்து பேரானந்தம் கொள்ளும் மீனாட்சியுனுடைய பார்வை பக்தனுக்கும் உண்டாகிறது.

அத்யாத்ம தத்வ விசாரத்தாலே உபநிஷத்துக்கள் வேத சிரஸ்ஸு என்று புகழ்வதற்குக் காரணம் ஸ்ரீ மீனாட்சியின் பாதம்பட்ட மகிமை என்பதை நாம் அறியவேண்டும் அந்தப் பாதங்களை நம் சிரஸிலும் வைத்துக் கடைத் தேர வைக்கும் கருணையுருவமே ஸ்ரீ மீனாட்சி.

ஈச்வரனுடைய க்ரோதாக்னியினால் தஹிக்கப்பட்ட மன்மதன் மீனாட்சியின் அரைக்கட்டுப் பாகமாகிய கங்கையினுடைய - சுழியில் மூழ்கிப்போனதும் நீல ரோமாவளிகளாகக் கிளம்பி, ஈச்வரனுக்குத் தபஸித்தியைக் காட்டும் இரஹஸ்ய குஹையைத் தியானமாகக்கூடும் பக்தனுக்கு, கற்பகவிருக்ஷத்தின் மலர்களாகக் காட்சியளிக்கும் மீனாட்சி தேவியின் கிருபையை அளவிட்டுச் சொல்ல யாரால் முடியும் ?

விசால ஆகாயகுறையிலிருந்து மூன்று ரேகைகளான வேர்களாலே, ரோமாவளிகளான வள்ளியிலே, ஸ்தனங்களாகிற இரண்டு மொட்டுக்கள் விகஸிக்கும்போது, ஒன்றில் ஈச்வரனும் ஒன்றில் ஈச்வரியுமாகத் தோன்றி, தாய் தந்தையர்களைப்போல் உறவைக் காட்டி அழைக்கும் பக்தனை, திருக்குழந்தையாக விளையாடச் செய்வது மீனாட்சியின் அருட்பார்வையே யாகும்.

இந்தக் குஹ்யமார்க்கத்தைத் தியானமாகக் கூடின போதுதான், மார்க்கண்டேயர் எமனை ஜயித்தார் என்பதை நாம் அறியவேண்டும்.

நரகத்தை அடைவதற்கும் ஸ்வர்க்கத்தை அடைவதற்கும் சாயுஜ்யம் அடைவதற்கும், தேவியின் நிதம்பப் பிரதேசமாகிய குஹ்யை இடம் கொடுக்கிறது. ஆசை முதலிய காமங்களுக்கு அகப்பட்டுப் பெண்ணாசையிலேயே இருப்பது நரகத்திற்கு ஆளாக்கிவிடும். பகவத் பக்தியுடனிருந்து, அவ்வப்போது தம் பத்தினியாரிடம்மட்டும் இரமிப்பதானது ஸ்வர்க்கத்திற்கு ஆளாக்கிப் போகங்களைமட்டும் அனுபவிக்கச் செய்கிறது. எல்லாப் பெண்களையும் தாயாகக் கருதி, நிதம்பப் பிரதேசத்தைத் தியானித்துப் பூஜித்துவரும்போது, மூன்று ரேகைகளாகிய வேர்பிடித்து, நீர் நிரம்பிய சிரஸிலிருந்து கிளம்பிய ரோமாவளியாகிய வள்ளி ஹிருதயத்தில் படர்ந்ததும் மயானத்திற்குத் ததந்த, அஷ்டதளமுடைய தாமரை விகஸித்து அதன் நடுவில் மீனாட்சியைக் கண்டு ஆனந்தமடைந்த பக்தன் சாயுஜ்யம் அடைகிறான் என்பதை காமகலா தியானத்தால் உணரக்கூடியதாகும்.

நாகத்தை அடைவிக்கும் காமவெறியைவிட்டு அதையே திருப்பி உன்முகத்திலே தியான பூர்வமாகக் கொண்டாடி, ஸ்ரீ மீனாம்பிகையினுடைய கருணைப்பார்வையென்னும் அமுதைப் பருகி, தேஹத்தைப் பரிசுத்தம் செய்வாயாக.

கிளி கூட்டிலிருந்தாலும் தனிப்பட்டு இருப்பதுபோல, தேஹமாகிய கூட்டிலே ஸ்ரீ மீனாம்பிகையைத் தியானிக்கும்போது, அறிவில்லாத நம்மைக் கிளியாக்கிப் பாடம் படிப்பித்து, அறிவை ஊட்டி, கடைத்தேறவைக்கிறாள் தாயாகிய ஸ்ரீ மீனாட்சி! தம்மை அண்டுயவர்களை ஆநந்திக்கச்செய்வதுதான் தனக்கு ஆனந்தமென்று சதா புன்னகையுடன் அருள் பொழிந்துகொண்டிருக்கும் ஸ்ரீ மீனாம்பிகையைத் தியானிக்கும் பக்தன் பூர்ணானந்தம் கொள்வான்.

இந்திரனுடைய கதம்பவனத்தில் வேர்பிடித்த கற்பக விருக்ஷத்தின் புஷ்பம், மீனாட்சிதேவியை உபாஸிக்கும் பக்தனுடைய ஹிருதயத்தில் விசாலமாக விகசிக்கிறது.

மந்திரங்களைக் கற்பித்த இருஷிகள் முத்து மணிகளாகி ஸ்ரீ மீனாட்சியின் மார்பில் ஹாரமாக இருந்து, ஸ்தன்யபான மென்னும் அம்ருதத்தைப் பருகி, திருக்குழந்தைகளாகி ஒளி மயமாகப் பிரகாசிக்கிறார்கள்; ஜீவன்முக்தர்களாக விளங்குகிறார்கள்.

நவமணிகள் இழைத்த ஒட்டியாணத்தை மிகுந்த சோபையுடன் அளவுக்குமேல் பொங்கிக்காண்பதாலே, எத்தனையோ அண்டங்களை அணுவாகவும் மஹத்தாகவும் கொண்டு அடக்கிய ஞானகர்ப்பத்தைக் காட்டி, சித்த மதில் ஆதித்யனை உதிக்கச்செய்து, நவஸித்திகளையும் அருளிக் காதுவரை நீண்டுள்ள விசாலக் கண்களின் பார்வையால் இரட்சிப்பது மீனாட்சிதேவியே ஆகும்.

மீன்கள் ஜலத்திலிருக்கும் அழுக்குக்களை எடுத்துச் சுத்தப்படுத்துவதுபோல, ஸ்ரீ மீனாட்சியை உபாஸிக்கும் பக்தனுடைய ஹிருதயம் பரிசுத்தமடைந்து, உஷ்ணத்தால் ஏற்படும் வியாதியை நீக்கி, குளிர்ந்த ஜலம் போலக் கருணை வீசுகிறது.

நீலத்தாமரை போன்ற மீனாட்சிதேவியின் முகத்தில் புன்சிரிப்பென்னும் சந்திரனொளி வீசுவதால், நீலத்தாமரையைத் தங்க நிறமாகக் காணும் பக்தனுடைய ஹிருதயம், பயம் நீங்கி நிர்மலமாகப் பிரகாசிக்கிறது.

மீனாட்சிதேவியின் மூக்கிலிட்ட புல்லாக்கையும் நத்தையும் பார்த்துப் பார்த்து, ஒளி வீசுவதான இயற்கையைக் கொண்ட கருட பட்சியாகத் தன்னை வாகனமாக்கிக் கொடுத்து, தேவியின் கிருபையைப் பெறுகிறார்கள்.

மீனொத்த பார்வையில் கருணைபொழியும் கருவிழியிலிருந்து, கூர்மையான பாணத்தைத் தந்து பக்தனுடைய ஹிருதயத்துள் ஷட்வர்க்கங்களைத் தீர்த்து இரட்சிக்கும் மீனாட்சிதேவியின் பாதகமலங்களுக்கு சதா நமஸ்காரம்.

அநேகம் கோடி சந்திரர்களும் சூரியர்களும் தோன்றிய பிரகாசத்திற்கு ஒப்பான கிரீடத்தைத்தாங்கிய மீனாட்சி

தேவியின் உருவத்தைத் தியானித்து பூஜித்து வருகிறவனுடைய உள்ளம் சதா ஒளிமயமாகவே இருக்கும்.

இப்படி ஸ்ரீ மீனுட்சியை உபாஸித்து வரும்போது பழக்கத்தில் நாமே மீனுட்சிஸ்வரூபமாக, ப்ரம்மாவும் விஷ்ணுவும் அறியாத பாத கமலமாகிய ப்ரம்மஸ்வரூபமாகி விடுவோம்.

பூமியிலும் அந்தரிக்ஷயத்திலும் காணக் கூடாத மீனுட்சி தேவியின் பாதம் பரிசுத்த ஹ்ருதய பக்தனுடைய உள்ளத்தில் ஜோதி மயமாகப் போற்றுகிறவனுக்கே பேசும் தெய்வமாகக் காட்சி யளித்து இரட்சிக்கிறது.

துர்க்காதேவி பூஜையினுலே துரித வர்க்கங்களெல்லாம் தீர்ந்து, ஸ்ரீ தேவியைப் புகழ்வதினுல், வாக்விசாலம் சரமாரியாகப் பொழிவதான ஸ்ரீ சரஸ்வதி முதியினுலே' அருணனுெளிக்கு சமானமாகிய ஸ்ரீ சாவித்ரியைக் கண்டு, அருள் பெற்ற உள்ளத்தில் திவ்ய தேஜஸ்ஸாகக் காட்சி யளிக்கும் காயத்ரிதேவியை உபாஸித்து, லலிதாதேவியைப் போல அழகுடைய ஹ்ருதயமாக்கி விட்டால், சுழன்று கொண்டிருக்கும் மனதை ஒளிமயமாக்க ஸ்ரீ சக்ரம் தோன்றியதிலே, ஸ்ரீ காமாக்ஷியின் பாதத்தண்டை அமர்ந்து, காமங்கள் பிறந்து ஒடுங்குவதான மூலஸ்தானம் விளங்கி, (ஆதி காரணம் விளங்கி), விசாலமடைந்திருக்கிற கண்களிலிருந்து அருட்பார்வை தோன்றி ஸ்ரீ மீனுக்ஷி தேவியினிடமிருந்து கிளம்பிய க்ருபையாகிய பெண் பக்தனுடைய உள்ளத்திலே நாட்டியமாடுகிருள்.

இந்த மீனுக்ஷி கீதையை வரைந்து மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கருதிய ஹ்ருதயம் எவ்வளவு பரிசுத்தத தன்மையை அடைந்திருக்குமோ, அதேயருள் இதைப் படித்துக் கேட்பவர்களுக்கும் தினசரி பாராயணம் செய்பவர்களுக்கும் உண்டாகும்.

எருமைக்கு ஸமானமாகிய அறிவீனத்தைப் போக்கி, சிங்கத்தை யொத்த தீர அறிவின்மேலேறி விளையாடுந் திவ்ய தேஜஸ் இந்தத் தேவி கீதையைப் படித்து மனனம் செய்கிறவனுடைய உள்ளத்திலே வீசுகிறது.

ஸ்ரீ அன்ன பூர்ணீ

எந்த அன்னத்தால் ஈச்வரர் பசி தீர்த்தவராக ஸ்தாணு வைப்போல அசையாமல் யோகத்திலமர்ந்திருக்கிருரோ, அதே பிக்ஷையைப் பக்தனுக்கும் அருளி முறையே ஜபம், தியானம், நிஷ்டை யெனக் காட்டி ஈச்வரானந்தம் கொள் ளச் செய்யும் மூர்த்தி தங்கக் கதிர்களை ஏந்திய ஸ்ரீ அன்ன பூர்ணேச்வரியே யாகும்.

உதயகாலத்தில் தோன்றுஞ் சூரியனைத் தியானிக்கச் செய்து, அதில் நின்று பொழியும் இரச்மிகளைக் கதிர்களா கக் கொண்டு, உள்ளத்தைப் பரிசுத்தம் செய்யக் கூடியவள் ஸ்ரீ அன்ன பூர்ணியாகும்.

ஹிமவானிடத்திலிருந்து ஸ்ரீ தனமாகக் கொண்ட மஹத்தானதும் அணுவுக்கணுவானதும் கனத்ததும் ஐரா வதத்தின் துதிக்கை போன்றதுமான துடையை, ப்ரம்மன் விஷ்ணு ருத்கர்களைத் தூணகக் கொண்ட ஸதாசிவன் மடி யிலிருந்து ஆனந்திக்கும் திவ்ய உருவத்தை அன்னபூர்ணி தேவியாகக் கொண்ட பக்தனுடைய உள்ளத்தில் பராசக்தி விளங்குகிறது.

பூமிக்கு நெற்றிப் பாகமாகக் காசி க்ஷேத்ரம் விளங்கு கிறது. வருணை அஸி என்ற (இரண்டு கண்களுக்கு மத்தி யில்) இரண்டு நதிகளுக்கு மத்தியில் விளங்குந் திவ்ய தேஜோமயமாகப் பக்தனுக்குக் காட்சியளிக்கும் அன்ன பூர்ணு தேவியை உபாஸித்த சக்தியானது தேஜஸுடைய முகத்தில் விசாலமடைந்த க்ஷேத்திரமாகப் பிரகாசிக்கிறது.

தம் சிரஸில் விசாலமடைந்த ஸஹஸ்ராரமதில் ஸ்ரீ அன்னபூர்ணுதேவியைச் கண்டு யோகானந்தத்தில் அழுந்தியவராய் இருந்த பரமேச்வரருடைய சிரஸில் கங்கை ப்ரவாஹம் வருவதற்கு பூர்ணுதேவியின் புன்முறுவலே, பாபத்தைத் தீர்க்குங் கங்கையாகப் பிரவஹிக்கிற்று. இவ் வாறு தியான ஸுகத்திலிருந்த பக்தனுக்குக் கங்கை பிறக்கு மிடமான மானஸிக் ஸிரஸில் தோன்றும் அன்னபூர்ணு

தேவியின் பாதத்தில் அமிழ்ந்து தன்னைச் சுத்தப்படுத்தும் படி செய்வதான தர்சனம் ஸ்ரீ அன்னபூர்ணா தர்சனமே யாகும்.

கைலாஸத்தில் தபஸ் செய்யும் ஈச்வரருக்கு உபசரணை யினாலே தபஸித்தி அடைந்த பார்வதி ஸ்ரீ அன்னபூர்ணியா கத் தோன்றி, தாயின் ஸ்வரூபத்துடன் பிக்ஷையளிக்கிறாள். ஸ்ரீ அன்னபூர்ணியைத் தியானிக்கும் பக்தனுக்கும் ஈச்வர ருக்கு எந்தப் பிக்ஷையை அளித்தாளோ அதே பிக்ஷையைத் தந்து, சித்தசுத்தி அடையச் செய்கிறாள்.

ஈச்வர ஆராதனையினாலே தர்மார்த்த காமமோக்ஷத்தை அருளும் ஒருவிதப் பார்வையும், இவைகளை விட்டு நிஷ்காமி யமாக நித்யானந்தம் கொள்ளச்செய்யும் ஒருவிதப் பார்வை யும் இருப்பதால், பாதி ஈச்வரன் பாதி ஈச்வரி, என்று கவி களால் சிவார்த்த விக்ரஹம் என்று கொண்டாடப்பட்டது வாஸ்தவமே. ஆனால், இந்தச் சிவார்த்த விக்ரஹத்தை அநுபவத்தால் உள்ளத்தில் கண்டு மகிழ வேண்டுமே ஒழிய, பாதியுடம்பு பெண்ணாகவும் பாதியுடம்பு புருஷனாகவும் போற்றுவது சரியில்லை! நீ அன்ன பூர்ணியை உபாஸிக்கும் போது தானே அன்ன பூர்ணியாகச் சோபித்து ஆனந்த மடையலாமே தவிர, உள்பார்வைக்கு ஆணாகத் தென்படு வது அந்த ஸமயம் உனக்குத் தெரியாது போனாலும், தியா னத்தை விட்டெழுந்து பாஹ்ய விஷயங்களுக்கு வந்ததும் உணர்வதாகும் ஆணானாலும் பெண்ணானாலும், பூர்ணவிக்ர ஹத்தை ஏகாக்ர சித்தத்தால் ஆராதிக்கும்போது பெண் ஆணாகவும் சோபிக்கலாம், ஆண் பெண்ணாகவும் சோபிக்க லாம். இந்த ஆண் பெண் அலி என்ற வேற்றுமையுமில் லாத ஒரே தன்மையிலிருந்து (உப்புப் பதுமை நீரில் கரை வதுபோல) தன்னை ஜோதியில் கரைத்து விடுவதுதான் உபாஸனை ஸித்தியாகும்! இதனாலே, நாம் பூர்ணதர்சனத் தைப் பெறுகிறோமென்பதை மறவாதே!

பராசக்தியை உபாஸித்து உபாஸித்து, தாமே பராசக்தி யாகி, தர்மார்த்த காமமோக்ஷத்தையும் கொடுப்பேன்

என்று சொல்வது போல, சிதம்பரத்தில் நடராஜர், இடக் காலைத் தூக்கி நடனம் செய்வது, பக்தனுக்கு அபீஷ்டத் தைக் கொடுக்கிறார்.

மதுரையில் பராசக்தி ஈச்வரனை உபாஸித்து உபா ஸித்து, தாமே ஈச்வரராகிச் சோபித்து, தர்மார்த்த காம மோக்ஷத்தையும் அருளி, அதற்கப்பாலுள்ள நித்யானந்தத் தையும் கொடுப்பேன் என்று சொல்வதுபோல, வலக்காலைத் தூக்கி ஆடுகிறார். ஓரிடத்தில் அம்பாள் ஈச்வரனுகக் காட்சி யளிக்கிறாள். ஓரிடத்தில் ஈச்வரன் அம்பாளாகக் காட்சி யளிக்கிறார்! இதைப்போல, நீயும் அப்பாளை உபாஸித்தா யானால், சிவனாகி விடுகிறாய் என்பது ஸ்ரீமாதா அன்னபூர் ணியின் ஒளிக் கதிர்களிலிருந்து சொரியும் அமுதைப் பூஜித் தவனுக்கு விளங்குகிறது.

தேவியின் நிதம்பப்பிரதேசமாகிய குண்டத்தில் ஹோமம் செய்து, காமக்ரோதாதி ஸம்ஸாரவாஸனா பீஜத் தைக் கருக்கியபோது, ஸ்ரீ அன்னபூர்ணியின் கருணைப்ரவா ஹம் கங்கையைப்போல வந்து குளிரச்செய்யும் ஈச்வரஹிரு தயம்போலவே, ஸ்ரீ அன்னபூர்ணியை உள்ளத்தில் கண்டு பூஜிப்பவனுடைய ஹ்ருதயமும் விசாலமடைந்து அருட்கங் கையிலேயே நீந்தி விளையாடச் செய்கிறது.

ஸ்ரீ துர்க்கா லக்ஷ்மி ஸரஸ்வதி ஸாவித்ரி என்ற சக்திகள் கூடி, தானொரு சக்தியும் கூடிய காயத்ரீ கவசத்தைப்போல, ஸ்ரீ அன்னபூர்ணியின் அட்டிகையைப் பார்த்துப் பார்த்துத் தன்னை மறந்து, திவ்ய ஒளியில் லயித்து, ஸமாதியிலாழ்ந்து, தன்னை லிங்கரூபமாக்கி நித்யானந்தமடைந்த ஸ்ரீ விஸ்வேச் வரரைப்போல, ஸ்ரீ அன்னபூர்ணியை உபாஸிக்கும் பக்த னுக்கும் உள்ளத்தில் விசாலமாகிய அட்டிகையின் ஒளியை வீசி ஆனந்திக்கச் செய்கிறாள்.

ஸ்ரீ அன்னபூர்ணி பக்தனுக்குப் பிக்ஷையளிக்கும் தரு ணத்தைக் குபேரனானவன் பார்த்து 'தன்னிடமில்லாத ஒரு பூர்ண ஸொத்தை அளிக்கிறாளே தேவி' என்று ஆச்சர்யப்

படுவதைத் தம்முள்ளே அநுபவமாக ஸ்ரீ அன்னபூர்ணி உணர்த்துகிறதைப் பார்க்கிறுன் பக்தன்.

நான்குவித புருஷார்த்த பிக்ஷையைத் தருவதுடன் பூர்ணுனந்த பிக்ஷையையும் காட்டிப் பக்தனுக்கு அருள்புரியும் தேவி அன்னபூர்ணியாகும்.

ஸ்ரீ மஹாபைரவரின் நெற்றியில் மூன்ருவது கண்ணிலிருந்து பிறந்த ஜ்வாலே, ஸ்ரீ அன்னபூர்ணியின் கடைக்கண் பார்வையாகிற கங்கையை விட்டதும், அணைந்து குளிர்ச்சி அடைந்தது. அப்பேர்ப்பட்ட ஸ்ரீ மாதாவுக்கு நமஸ்காரம்.

ஸ்ரீராமநாம ஸ்மரணையினுலே சுத்தியடைந்த சித்தத்தைக்கொண்டு ஸ்ரீ துர்கா பரமேச்வரியைப் பூஜித்து வருவதால், இந்திரியங்கள் ஒருமுகப்பட்ட உள்ளத்தில் தங்கவொளிபோல ஸ்ரீ சுப்ரமணியைக் கண்டு, ரேதஸை அடக்கிய பக்தனுக்குத் தாய்போல வந்த ஸ்ரீ லலிதாவின் தர்சனத்தினுலே உள்ளமானது ஈச்வரர் மோஹிக்கும்படியான கைலாஸமாகிறது. இந்தப்படி ஈச்வரஹ்ருதயம் விளங்கிய பக்தனுடைய உள்ளத்தில் பூர்ணகடாக்ஷத்தைக் காட்டிக் கொண்டு அன்னபூர்ணுதேவி ஸதா வீற்றிருக்கிறுள்.

ஜகன்மாதா பராசக்தி பூர்ணதர்சனத்தைத் தந்து சாந்தியடையச் செய்வாராக.

ஸ்ரீ புவனேச்வரி த்யான ஸ்லோகம்.

ஸ்மரம், யோனிம், லக்ஷ்மீம், த்ரிதய மிதமாதௌ தவ மனோர்நிதாயைகே நித்யே நிரவதி மஹாபோக ரஸிகா :! பஜந்தி த்வாம் சிந்தாமணிகுண நிபத்தாக்ஷ வலயா : சிவாக்னௌ ஜுஹ்வந்த் : ஸுரபிக்ருததாரா.

ஸுதிசதை !!

ஓம் ஹ்ரீம் என்பதை 108 நாமாக்களின் முன்சேர்த்து படிக்கவும்.

1. ஓம் ஹ்ரீம் புவனேச்வர்யை நம :
2. ,, ஏகார ரூபாயை நம :
3. ,, பவாயை நம :
4. ,, ஸர்வ மங்களாய நம :
5. ,, அஷ்டைச்வர்யப்ரதாயின்யை நம :
6. ,, அம்பிகாபுரவாஸின்யை நம :
7. ,, ஸுப்ரமண்யஹ்ருதயாயை நம :
8. ,, யோகித்யேயாயை நம :
9. ,, முனிஸம்ஸேவ்யாயை நம :
10. ,, வேதாந்தலக்ஷணாயை நம :
11. ,, நவார்ணமனுஸ்துதாயை நம :
12. ,, வாக்பீஜஸ்வரூபிண்யை நம :
13. ,, காமபீஜஹ்ருதயாயை நம :
14. ,, பிந்துநாதஸ்ரூபிண்யை நம :
15. ,, ஷோடசபத்ரநிலயாயை நம :
16. ,, த்ரிகோணமத்யநிலயாயை நம :
17. ,, வ்ருதத்ரயஸ்வரூபிண்யை நம :
18. ,, மங்களகணேச ஜனன்யை நம :
19. ,, ஸனகாதிமுனிஸ்துதாயை நம :
20. ,, சாந்திஸ்வரூபிண்யை நம :
21. ,, சிதம்பரசரீரிண்யை நம :
22. ,, வைத்யநாதக்ருஹிண்யை நம :
23. ,, ஏகாம்ரசரீரிண்யை நம :

24. ஓம் ஹ்ரீம்-கமலாலயவாஸின்யை நம:
25. ,, பாண்ட்யராஜஸ்துதாயை நம:
26. ,, மார்க்கண்டேயவரப்ரதாயை நம:
27. ,, புண்டரிக புராதீசாயை நம:
28. ,, பில்வவனப்ரியாயை நம:
29. ,, சிவதாண்டவஸாக்ஷிண்யை நம:
30. ,, சிவப்ரஸாதஸம்பன்னுயை நம:
31. ,, சிவசைல குமாரிகாயை நம:
32. ,, சிவானந்தரஸார்ணவாயை நம:
33. ,, சிவாந்த: புரவாஸின்யை நம:
34. ,, சிவஸாம்ராஜ்யதாயின்யை நம:
35. ,, சிவானந்தரஸாதாராயை நம:
36. ,, சிவகௌர்யை நம:
37. ,, சிவபோகதாயை நம:
38. ,, ப்ரம்மபூஜிதாயை நம:
39. ,, திவ்யஸுந்தர்யை நம:
40. ,, பத்மவாஸின்யை நம:
41. ,, வேதஸ்வரூபாயை நம:
42. ,, குமராஜனன்யை நம :
43. ,, பிந்துஸ்வரூபிண்யை நம:
44. , சரணுகதரக்ஷணுயை நம:
45. ,, அனுக்ரஹப்ரதாயை நம:
46. ,, சந்த்ரலேகாவிபூஷிதாயை நம:
47. ,, ஸர்வலோகவசங்கர்யை நம:
48. ,, ஸுராஸுரநமஸ்கிருதாயை நம:
49. ,, மூலாதாரகதாயை நம:
50. ,, ஸுஷும்ணுத்வானமத்காயை நம:
51. ,, சதுர்வர்க்கப் பலப்ராதாயை நம.
52. ,, ஆத்மாராமாயை நம:
53. ,, பஞ்சதசாக்ஷர்யை நம:
54. ,, மணிபூரகஸுந்தராயை நம:
55. ,, ஆதாரசக்திரூபிண்யை நம:
56. ,, ஆர்தஜனரக்ஷிண்யை நம:

57. ஓம் ஹ்ரீம்-ஆர்யகணஸ்துதாயை நம:
58. ,, ஆர்யாவர்த்தநிவாஸின்யை நம:
59. ,, ஆத்யந்தசிவரூபாயை நம:
60. ,, ஆதிதத்வப்ரகாசாயை நம:
61. ,, ச்ரீவித்யாமந்த்ரரூபாயை நம:
62. ,, சதுர்வேதாந்தவேத்யாயை நம:
63. ,, ச்யாமளாபீடவாஸாயை நம:
64. ,, மஹாமாயாஸ்வரூபாயை நம:
65. ,, ரத்னமந்திரவாஸாயை நம:
66. ,, மல்லிகாதாமபூஷாயை நம:
67. ,, மந்தாகினீஸ்வரூபாயை நம:
68. ,, மௌக்திகாபலஹாராயை நம:
69. ,, சிவவாமாங்கஸ்ம்ஸ்தாயை நம:
70. ,, கஜாஸ்யகுஹபாலின்யை நம:
71. .. ஸம்ஸாரரோகநாசநாயை நம:
72. ,, விஞ்ஞானப்ரவிஞ்ஞயை நம:
73. ,, கோணத்ரயநிவிஷ்டாயை நம:
74. ,, மூலமந்த்ரஸ்வரூபாயை நம:
75. ,, சிதக்னி பூததேஹாயை நம:
76. ,, சிவசக்த்யைகவேஷாயை நம:
77. ,, சாச்வதைச்வர்யஸுகதாயை நம:
78. ,, துஷாரகிரி நிவாஸாயை நம:
79. ,, சிவமானஸ ஹம்ஸின்யை நம:
80. ,, ஸ்வர்ணதாடங்கசோபிதாயை நம:
81. ,, தாடிமீ பீஜரதனாயை நம:
82. ,, கம்புகரீவாயை நம:
83. ,, வடபத்ரோதராயை நம:
84. ,, ஹேமபூஷிதவிக்ரஹாயை நம:
85. ,. ஸௌந்தர்யகுணஸம்யுதாயை நம:
86. ,, ஜாலந்தர மஹாபீடாயை நம:
87. ,, பூர்ணகிரிபீடவாஸின்யை நம:
88. ,, சதுஷ்ஷஷ்டி கலாத்மிகாயை நம:
89. ,, ஸர்வதோஷவிநாஸின்யை நம:

90. ஓம் ஹ்ரீம்-மந்தஸ்மித முகாம்புஜாயை நம :
91. ,, கல்யாணநிலயாயை நம :
92. ,, சுபலக்ஷணஸம்பன்னயை நம :
93. ,, சுபஸௌபாக்யநிலயாயை நம :
94. ,, தக்ஷாத்வரவிநாசின்யை நம :
95. ,, ஸதாசிவகுடும்பின்யை நம :
96. ,, ஸச்சிதானந்தலக்ஷணயை நம :
97. ,, சந்த்ரமண்டலவாஸின்யை நம :
98. ,, கலபாஷிண்யை நம :
99. ,, துரிதாபஹாயை நம :
100. ,, ஸர்வஸ்வதந்த்ராயை நம :
101. ,, மதங்ககுலபூஷணயை நம :
102. ,, மதங்கமுனிஸம்பூஜ்யாயை நம :
103. ,, கதம்பாரண்யநிலயாயை நம :
104. ,, காமகோடிபீடஸ்தாயை நம :
105. ,, மனோவாசாமகோசராயை நம .
106. ,, சரணாகதரக்ஷிண்யை நம :
107. ,, ஹ்ரீங்காரபீடஸ்தாயை நம :
108. ,, ஹ்ரீங்கார நிலயாயை நம :

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

ஸர்வ மங்கள மாங்கல்யே
ஓம் ஹ்ரீம் புவனேஸ்வரி சர்வார்த்த சாதிகே !
ஸரண்யே அஷ்டைச்சுவர்யப்ரதே தேவி
அம்பிகாபுரவாஸின்யை நமோஸ்துதே !!

ஓம் சாந்தி மௌன ஸ்வாமிஜீ

ஸ்ரீ சுப்பரமண்ய ஸ்வாமிஜீ
சாந்தி ஆச்ரமம், அம்பாள்புரி

புவனேஸ்வரி பீடம், : அம்பத்தூர்.

ஓம் : தத் ஸத்

ஓம் தத் ஸத்

ஸ்ரீ புவநேஸ்வரி பீடம்

அம்பாள்புரி, அம்பத்தூர்.

ஓம் சாந்தி ஆஸ்ரமத்தில் நடக்கிற உற்சவங்கள்

மார்கழி மாதம் : ஸ்ரீ வன துர்கா நவராத்ரி உற்சவம்

பங்குனி மாதம் : ஸ்ரீராம நவமியை ஒட்டி ஸ்ரீ வஸந்த நவராத்ரி உற்சவம்

ஆவணி மாதம் : ஸ்ரீ விச்வ மங்கள விநாயகர் சதுர்த்தி உற்சவம்

புரட்டாசி மாதம் : ஸ்ரீ சாரதா நவராத்தி உற்சவம்

இந்த உற்சவங்கள் நடப்பதோடு இன்னும் பல ஸ்ரீ நவக்ரஹ ப்ரதிஷ்டை தினம், ஆஞ்சநேய உற்சவம், ஆச்ரமத்து ஜெயந்தி உற்சவம் முதலியவைகளும் நடைபெறுகிறது. ஒவ்வொரு நவராத்ரி உற்சவங்களிலும் காலையில் பல ஆராதனைகள் நடப்பதோடு மாலையில் ஸங்கீதம், பஜனை, உபன்யாஸம், ஹரிகதைகள் நடைபெறும். யாவும் தெய்விக காரியமானபடியால் லோக க்ஷேமத்தின் பொருட்டு செய்வதனாலே அவாளவாள் பக்தர்கள் கைங்கரியங்கள் செய்து இஷ்ட சித்தியைப் பெறலாம்.

ஓம் சாந்தி :

—

ஸ்ரீ புவநேஸ்வரி பீட ஸ்தாபனம்
அம்பாள்புரி, அம்பத்தூர்.

"ஓம் ஆதித்யாய வித்மஹே ஸஹஸ்ர கிரணாய தீமஹி
தன்னோ சூர்ய: ப்ரஜோ தயாத்."

ஸாக்ஷாத்கார அம்பிகையின் பாத கமலங்களில் விளங்குகின்ற நவக்ரஹ மூர்த்திகளில் முதல்வரான ஸ்ரீ சூர்ய பகவான் எல்லோருடைய இருதயத்திலும் ப்ரகாசித்துக்கொண்டு ஆதித்யனாக வந்து, பக்தர்கள் எல்லோரையும் காப்பாற்றுவாராக.

மதராஸுக்குச் சமீபம் அம்பாள்புரி என்ற அம்பத்தூரில் 1946ஸு ஸ்ரீ மௌனாநந்த ஸத்குரு ஸ்வாமிகளால் ஸ்தாபிக்கப்பெற்று ஸந்நிதானத்தின் ஏகதேச உபாஸனா மூர்த்தியான ஸ்ரீ பராம்பிகா க்ரஹத்துக்கு தக்ஷிண பார்ச்வத்தில் பக்தர்களின் ஸதாகால ஸௌகர்யார்த்தம் ஏக ஸந்நிதியாக ஸ்தாபிதமாயிருக்கும் (தவி-பிரம்மசாரிகள்) ஸ்ரீ விச்வ மங்கள விநாயகர், ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் கோவிலுக்கு ஆக்நேயத்தில் நவக்ரஹ ஆலயம் ஸ்ரீ லலிதாமண்டபம் என்ற பெயருடன் நிர்மாணமாயிருக்கிற திவ்ய இடத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீ மன்மதஸு மாசிமீ 11உ (23-11-56) வியாழக்கிழமை ஸ்ரீ சூர்யநாராயணர் ஸந்நதியை திறந்து, நவக்ரஹ திவ்ய மூர்த்திகளை வைதீக அனுஷ்டானங்களுடன் வைதீக பிரதிஷ்டை செய்து மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

பக்தகோடிகள் தம்மாலியன்ற கைங்கர்யம் செய்து அம்பாள் கடாட்சத்தைப் பெறலாம்.

ஓம் சாந்தி